## எமது பண்பாட்டுத் தளத்திலிருந்து நாடகம் உருவாக வேண்டும்

முருகபூபதி நேர்காணல்





www.kooththarangam.co.nr

# கூத்தரங்கம்

KOOTHHARANGAM

விலை 35/-

PUBLIC LIBRARY
JAFFNA

## காலங்கள் கடந்தும் வாழும் 'தண்ணீர் தண்ணீர்'

நாடக விமர்சனம்



## சங்கரதாஸ் சுவாமிகளின் அரங்கத்தை புரிந்துகொள்வதை நோக்கிய தேடல்

பேராசிரியர் வீ.அரசு

சென்னைக் கலைக்குழு நடத்திய வெறுப்புணர்வுக்கு எதிரான கலைஞர்கள் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் [illegible] பங்கேற்ற நதியின் கருணை என்ற ஆற்றுகையின் [illegible] ராமசாமி இதனை நெறிப்படுத்தியிருந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PL

# கூத்தரங்கம்

ஆரம்பம் - பங்குனி - 2006

[illegible]


**திறந்த வெளியொன்று வேண்டும்**


ஆலோசகர்கள் :

பேராசிரியர் க.சிவலிங்கராஜா
தலைவர், தமிழ்த் துறை,
யாழ். பல்கலைக்கழகம்

பேராசிரியர் வி.பி.சிவநாதன்
தலைவர், சட்டத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்

கலாநிதி கலாமணி
சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

கலாநிதி மனோன்மணி
சண்முகதாஸ்

பிரதம ஆசிரியர் :
தே.தேவானந்த்

உதவி ஆசிரியர்கள் :
வ.சுஜித்தா
க.சுபாஜினி

நிர்வாக ஆசிரியர் :
தே.பிரேமானந்த்

வடிவமைப்பு :
பிரேம்

வெளியீடு:
செயல்திறன் அரங்க இயக்கம்
Active Theatre Movement



தொடர்புகளுக்கு:
'அரங்கம்', ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
இலங்கை.

தொ.பே.: [illegible]


e-mail: koothurangam@gmail.com,
[illegible]@yahoo.co.uk,
[illegible]@gmail.com

Web: www.koothurangam.co.nr



[illegible]






[illegible]

05 | [illegible]

பதினாறாம் நூற்றாண்டு ... [illegible] ... நாடக ... [illegible]




செய்திகள் 09

செயல்திறன் அரங்க இயக்கம் நடந்த ... நாடகத் தயாரிப்பு பயிற்சிப்பட்டறையை நடத்தியது. இதில் 33 பேர் பங்குபற்றினர்.

யாழ்ப்பாணத்தில் [illegible] அரங்கு

10 | [illegible]




[illegible]



[illegible]

16

[illegible]



22 | [illegible]

நாடகத்தின் பெருமை ... 1913இல் ... [illegible]



[illegible]

20 | [illegible]

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியலே அரங்கியலாக




**கலாநிதி கலாமணி**
விரிவுரையாளர்
கல்வியியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம்


கலை என்பதன் முதல் வரைவிலக்கணம் கூட மனிதனால் படைக்கப்படுவது என்பதுதான். மனித வாழ்க்கையிலிருந்து கலை பிறக்கிறது. மக்களால் மக்களுக்காகப் படைக்கப்படுபவை கலைகள் என்ற வகையில் கலைகளின் நோக்கம் மனிதநேயப் பண்புகளை வளர்ப்பதாக இருக்க வேண்டும்.

ஒரு குறித்த காலத்தில் வாழ்ந்த குறித்த மக்கள் கூட்டத்தினரின் நம்பிக்கைகள், இலட்சியங்கள், கொள்கைகள் கருத்து நிலைகள், விருப்பங்கள் என யாவற்றையும் உள்ளடக்கியதான ஒரு தொகுப்பே வாழ்வியல் என்பதால் உணர்த்தப்படுகின்றது. ஒரு மக்கள் கூட்டத்தினரின் வாழ்வியல் முறைமையை நாம் கலை இலக்கியங்கள் மூலம் அறிந்து கொள்கிறோம். இந்த அறிதல் அக்கலை இலக்கியங்களில் அவ்வாழ்க்கை முறைமை பதிந்து கொள்ளப்பட்ட வகையிலேயே விளக்கம் பெறும். இன்றைய காலகட்டத்தில் சரியான வாழ்வியற் பதிவின் அவசியமும் அதன்பால் கலை இலக்கியங்களின் பொறுப்பும் உணரப்படவேண்டும்.

## அரங்கின் பணி

சமூகத்துடன் பொருந்தி வாழல் மற்றும் சமூக இசைவாக்கப் பண்பை மனித சமுதாயத்தில் சுவறச் செய்வதில் அரங்கச் செயற்பாடுகளின் பங்கு முக்கியமானது. மனித நடவடிக்கைகளுக்கு உருவம் கொடுத்து அந்நடவடிக்கைகளின் இசைவு - முரண்பாடு என்பவற்றுக்கூடாக மனித வாழ்க்கையை எடுத்துக்காட்டுவதே அரங்கச் செயற்பாடுகளின் பணியாகின்றது. எனினும் மனித நடவடிக்கைகளை இந்த முரண் நிலையில் வைத்து எடுத்துக் காட்டுகின்றபோதே மனித வாழ்க்கையின் இசைவு - முரண்பாடுகளுடனும், ஆட்ட ஓட்டங்களுடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மனிதனால் அவ்வரங்கச் செயற்பாடுகளுடன் ஒன்றித்துப் போக முடிகிறது.

## தாமே ஆகி...

இந்த நிலைமையிலேயே பிறருடைய இன்பதுன்பங்களையும் தம்முடையதாக ஏற்று அவற்றை உணர்ந்துகொள்ள முடிகின்றது. பிறருடைய ஆளுமைக்குள் புகுந்து தாமே ஆகி அவற்றை உணர்ந்து கொள்ள முடிகின்ற இந்த ஒத்துணர்வு (empathy) என்ற அம்சமே அரங்கியலின் முக்கிய அம்சமாகும்.

ஒரு நிகழ்வு அரங்கத்தில் ஆற்றப்படுதலும் அந்நிகழ்வு சுவைக்கப்படுதலும் ஆகிய இரு வேறு செயல்களும் ஒன்றிணைவதிலேயே அரங்கியலின் உயிர் தங்கியுள்ளது. இதனாலேயே நாடகம் ஒரு எதிர்த் தாக்கமுள்ள கலையாக, ஓர் இயக்கமுள்ள கலையாக மிளிர முடிகின்றது. ஆற்றுகையின் விளைவுதான் அரங்கின் சாரம். ஆற்றப்படும் முறைமையன்று. இருப்பினும் ஆற்றுகையின் முறைமை அதன் விளைவில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு காரணி என்பதனை மறுக்க முடியாது.


POOBALASINGHAM BOOK DEPOT
Head Office:
Colombo - 11, Sri Lanka.
IMPORTERS, EXPORTERS, SELLERS & PUBLISHERS OF BOOKS, STATIONERS AND NEWS AGENTS.
Branch
Hospital Road,
Jaffna, Sri Lanka.
Branch
LONDON
Branch
Galle Road,
Wellawatte, Colombo 6,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை மூலம் நிகழும் தொடர்புகொள்ளலில் இடம்பெறும் மறைந்துள்ள பொருளுக்கான குறியீடாக, கலைகளில் வரும் வெளிப்படையான பொருள் அமைந்திருக்கும். இவ்வெளிப்படையான பொருள் மக்களது வாழ்க்கை அநுபவங்களை ஒட்டியதாக அமையும்போதே மறை பொருளைப் புரிந்து கொள்ளலும் சுலபமாக இருக்கும். எனவே மக்கள் அநுபவங்களோடு ஒட்டியவற்றைத் தெரிந்தெடுத்து அவற்றின் மூலம் ஆழமானவற்றைக் கலைகள் விளக்க வேண்டும்.

## புதிய பொருள் கூறலுக்கு அவசியம்

பாரம்பரியக் கலை வடிவங்கள் மக்களுக்குப் பரிச்சயமானவை என்பதால் புதிய பொருள் கூறலுக்கு அவை அவசியம். இந்திய மரபிலுள்ள முக்கிய அம்சம் புழக்கத்திலுள்ள கதைகளையே வியாக்கியானத்திற்கு எடுத்துக் கொள்வது. மேற்கொண்டு உடன்றுச் செல்ல அது சுலபமாக இருக்கின்றது. முன்னரே விடயம் அறிந்த பார்வையாளரை வசதியான ஆதாரமாகக் கொண்டு அதன் மேல் ரசனைகளை உண்டாக்கிக் கொண்டு போவது இங்குள்ள அற்புதமான முறையாகும். இந்த அடிப்படையிலேயே பாரதியின் பாஞ்சாலி சபதம் கவனத்திற்கு உரியதாகின்றது.

பாரம்பரிய கலை வடிவங்கள் நவீன காலத்து மனிதனின் அவலங்களை சிந்தனைகளை முழுமையான அளவில் வெளிப்படுத்த உதவுமா என்பதும், மரபுக் கலை வடிவங்கள் நவீன உள்ளடக்கங்களைத் தெளிவுப்



பாரம்பரிய கலை வடிவங்களைச் சரியான முறையில் அறிந்துகொள்ளாத வரை – ஆட்ட மரபுக் கூறுகளை முதன்மைப்படுத் தும் கூத்து மரபினதும் கர்நாடக இசை மரபை அச்சாணியாகக் கொண்ட இசை நாடக மரபினதும் வெளியீட்டுத் திறனை உணர்ந்து கொள்ளாத வரை – பாரம்பரிய கலை வடிவங்களின் ஆற்றல் குறித்து மதிப்பீடு செய்தல் பொருத்தமற்றது.

படுத்தில் ஒரு எல்லையை மீறிப் போகமுடியாதுள்ளன என்பதும் இன்று பாரம்பரிய கலை வடிவங்கள் குறித்து முன்வைக்கப்படும் கருத்துக்களாகும். ஆனால் பாரம்பரிய கலை வடிவங்களைச் சரியான முறையில் அறிந்து கொள்ளாத வரை - ஆட்ட மரபுக் கூறுகளை முதன்மைப் படுத்தும் கூத்து மரபினதும் கர்நாடக இசை மரபை அச்சாணியாகக் கொண்ட இசை நாடக மரபினதும் வெளியீட்டுத் திறனை உணர்ந்து கொள்ளாதவரை - பாரம்பரிய கலை வடிவங்களின் ஆற்றல் குறித்து மதிப்பீடு செய்தல் பொருத்தமற்றது.

இன்றைய நவீன நாடக மரபில், நாடகக் கருப்பொருளை கலாம்சத்துடன் உணர்த்தவல்ல அரங்க மொழியாக பாரம் பரியக் கலை வடிவங்களையும் அரங்கக் கூறுகளையும் பயன்படுத்த முடியுமென்ற நம்பிக்கை சில நெறியாளர்களிடையே துளிர்த்து வருகின்றது. இந்நம்பிக்கை மேலும் விதைக்கப்பட்டு நவீன அரங்க முயற்சிகளில் பாரம்பரிய அரங்கக் கூறுகளின் பிரயோகம் அதிகரிக்கப்பட வேண்டுமெனின் நவீன நெறியாளர் பாரம்பரிய அரங்கப் பயிற்சிக்குத் தம்மை அர்ப்பணிக்கும் நிலைக்குத் தயாராக வேண்டும்.

## ஆற்றவேண்டிய பணிகள்

பாரம்பரிய அரங்குகளில் தரிசனம் பெறுதல் எளிமையானதன்று. அடைசிய மனோபாவமின்றி ஆய்வு நோக்குடன் பாரம்பரிய அரங்கின் வரலாற்றுப் பின்னணி குறித்த தெளிவுடன் தரிசனம் பெறவிழைகின்றபோதே பாரம்பரிய அரங்கப் பயிற்சிகளிற் பெறும் படிப்பினைகளும் தரிசனங்களும் நவீன அரங்கச் செயற்பாடுகளில் அரங்க மொழியாக்கத்தை நுட்பமாகப் பிரயோகிக்கும் ஆற்றலுக்கு வழிவகுக்கும்.

பாரம்பரியக் கலைஞர்களை பாதுகாத்தலும், அவர் தம் ஆற்றல் வெளிப்பாடுகளை புதிய கருவிகளின் துணையுடன் பதிவு செய்தலும், புதிய சந்ததியினரிடத்து இப்பதிவுகளையும் அவற்றின் பேறான புத்தாக்க முயற்சிகளை கையளித்தலும், பழமையிலும் புதுமையிலும் இளந் சந்ததியினருக்குப் பயிற்சியளித்தலும், இவை யாவற்றுக்குமான கல்விசார் செயற்பாடுகளை வகுத்தலும் என விரிந்து கொண்டு செல்லும் செயற்பாடுகள் பல இன்று ஆற்றப்பட வேண்டியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கரதாஸ் சுவாமிகளின் அரங்கத்தை புரிந்துகொள்வதை நோக்கிய தேடல்




**பேராசிரியர் வீ.அரசு**

துறைத் தலைவர்
தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்


பிற்காலச் சோழர்கள் காலத்திற்குப் பின்பு தமிழ்ச் சமூகத்தில் பல்வேறு புதிய நிகழ்வுகள் நடைபெறத் தொடங்கின. குறிப்பாக பண்பாட்டுத் தளத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் இதற்குமுன் இருந்தவைகளின் தொடர்ச்சியாக அமையவில்லை. தெலுங்கு மொழி அரச மொழியாக வடிவம் பெற்றது. பல்வேறு வட்டாரங்கள் உருவாயின. ஒவ்வொரு வட்டாரமும் தனித்தனிக் குறு மன்னர்களால் ஆளப்பட்டது. 'சோழ சாம்ராஜ்யம்' என்ற அமைப்பு சிதைந்து துண்டு துண்டாகித் தனித் தனிச் சிறு ஆளுகைக்குட்பட்ட நாடுகள் உருவாயின. இதன் மூலம் பல்வேறு பண்பாட்டுக் கூறுகள், சிற்பம், ஓவியம் மற்றும் இலக்கியங்களில் பதிவாகத் தொடங்கின. தமிழ் இசை மரபு புதிய போக்கில் கால்கொள்ளத் தொடங்கியது.

மேலே குறிப்பிட்ட பண்பாட்டு நிகழ்வுகள் என்பவை பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதி தொடங்கி பதினைந்தாம் நூற்றாண்டில் முழுமை பெற்றது என்று கூறமுடியும். தமிழ்மொழி, இலக்கிய உருவாக்கம், கலை வடிவங்களின் உருவாக்கம், இசை வரலாறு ஆகிய பிறவற்றின் அடிப்படையில் தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றைக் கட்டமைக்க முயலும் போது கீழ்க்காணும் பிரிவுகளை உள்ளடக்கியதாகக் கொள்ள முடியும்.

- கிமு 250க்கு முற்பட்ட தொல்பொருள் மூலங்கள் மற்றும் பழங்குடி மனிதர்கள் இருப்பிடம் சார்ந்த தரவுகள் அடிப்படையில் கட்டமைக்கப்படும் வரலாறு.
- சங்க இலக்கியம் தொல்காப்பியம் உள்ளிட்ட பிரிவுகள் மற்றும் அகழ்வாய்வுகள் சார்ந்த தரவுகள் வழி கிமு 250 தொடக்கம் கிபி ஆறாம் நூற்றாண்டு வரையிலான தமிழ்ச் சமூகப் பண்பாட்டு கட்டமைப்பு.
- கிபி ஆறாம் நூற்றாண்டு தொடக்கம் படிப்படியாக உருப்பெற்ற அரச உருவாக்கத்தின் மூலம் உருவான நாடுகள், அதன் உச்ச வளர்ச்சிப் படிகள். நிலம் என்பது வரையறுக்கப்பட்ட சொத்து ஆக்கப்பட்ட சூழல். சோழ சாம்ராஜ்யம் உருவாதல்.
- கிபி 12ஆம் நூற்றாண்டு இறுதி தொடங்கி பதினாறாம் நூற்றாண்டில் உருவான விசய நகர, மராட்டிய மற்றும் மொகலாய மன்னர்களின் ஆட்சிப் பரப்புகள் சார்ந்து உருவான தமிழ்ச் சூழல். பதினாறாம் நூற்றாண்டு தொடக்கம் உருவான பிரித்தானியர் வருகை மற்றும் அதன் உச்ச வளர்ச்சியான ஐரோப்பிய காலனிய உருவாக்கம்
- இருபதாம் நூற்றாண்டின் இடையிலிருந்து உருப்பெற்று வரும் பின்காலனியச் சமூகம்.

## புரிந்துகொள்ளலுக்கான அடிப்படைகள்

மேற்குறிப்பிட்ட பண்பாட்டுச் சூழமைவில் பதினாறாம் நூற்றாண்டு தொடக்கம் தமிழக நிகழ்த்துகலை வடிவங்கள் பெற்ற மாற்றங்களின் ஊடாகச் சங்கரதாஸ் சுவாமிகளின் நாடக ஆக்கங்களைப் பற்றிய புரிதலை உருவாக்கிக்கொள்ள இயலும். வரலாற்றில் பதினாறாம் நூற்றாண்டு தொடக்கம் உருவான பண்பாட்டுச் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ளக் கீழ்க்காணும் அடிப்படைகள் உதவக்கூடும்.

பன்மொழிச் சூழல் என்பது பன்மொழி சார்ந்த பண்பாட்டுக் கூறுகளை உள்வாங்குவதாக அமைந்தது. இந்தப் பின்புலத்தில் நிகழ்த்துகலை வடிவம் என்பது அரச மட்டத்திலிருந்து படிப்படியாக இறங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுசனப் பண்புகளுடன் உருப்பெறத் தொடங்கியது. இவ்விதம் உருவான நிகழ்த்து வடிவங்கள் கூறுத்தாக் கங்களாகவும் உருப்பெற்றன. பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம், கீர்த்தனை, சிந்து, கதைப்பாடல் ஆகிய பிற வடிவங்கள் இவ்வகையில் உருப்பெற்றன.

இவ்வடிவங்களில் கீர்த்தனை வடிவம் என்பது மிகப் பரவலாக உருவானது. இசையமைப்புடன் நிகழ்த்தப் படும் கதை தழுவிய வடிவமாகக் கீர்த்தனை உருவானது. பதினேழாம் நூற்றாண்டு தொடக்கம் உருவான இவ்வடிவம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் உச்ச வளர்ச்சியுடன் உருப்பெற்றது என்று கூறமுடியும். இதனை, இராம நாடகக் கீர்த்தனை மற்றும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை ஆகிய இரண்டு வடிவங்களும் தமிழ்ச் சமூகத்தில் பெற்றிருந்த செல்வாக்கின் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

## கீர்த்தனைகளின் செல்வாக்கு

இராம நாடகக் கீர்த்தனை என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே சுமார் இருபது பதிப்புகளைக் கண்டது. 1853இல் உள்ள பதிப்பு கிடைக்கிறது. 1853 - 1900 என்ற காலப் பகுதியில் இருபது பதிப்புகள் வெளிவந்த இப்பிரதி 1900 - 1950 காலங்களில் மேலும் முப்பதுக்கு மேற்பட்ட பதிப்புகளைக் கண்டது. ஆக புதிதாக உருவான அச்சு வடிவத்தின் ஒரு பிரதி இவ்வளவு பதிப்புகளைப் பெறுகிறது என்பதின் மூலம், அதற்குச் சமூகத்தில் இருந்த செல்வாக்கைப் புரிந்து கொள்ளலாம். ஏறக்குறைய இராம நாடகக் கீர்த்தனையைப் போலவே நந்தனார் சரித்திரக் கீர்த்தனையும் செல்வாக்குடன் மீண்டும் மீண்டும் அச்சிடப்பட்டது.

சீர்காழி அருணாசலக் கவிராயர் மற்றும் கோபால கிருஷ்ண பாரதி ஆகியோரால் உருவாக்கப்பட்ட மேற்கண்ட பிரதிகள், கீர்த்தனை வடிவில் அமைந்திருப்பதன் மூலம் அது ஒரு வகை நிகழ்த்து வடிவமாக இருந்தன. இவ்வடிவில் இடம்பெற்ற இசைக் கூறுகள் எவை எவை என்பதைப் பின்வரும் செய்தி உறுதிப் படுத்துகிறது.

'பிரபாகர அச்சுக்கூடத்தில் பிரமாதீச வருடம் (1853) அச்சிடப்பட்ட இராம நாடகப் பிரதியில் இடம்பெற்றிருக்கும் இசை வடிவங்கள் வருமாறு: *சாவேரி, மத்தியமாவதி, அசாவேரி, நாட்டை, துசாவந்தி, கௌளிபந்து, மோகனம், ஸ்ரீ ருகனி, கலியாணி, நாத நாமக்கிரியை, சங்கராபரணம், தோடி, புன்னாகவராளி, ஆந்த பைரவி, நீலாம்பரி, அருட்டி, பைரவி, உசேனி, காம்போதி, கண்டா, கமாசு, காபி, எதுகுலகாம்போதி, பியாகடை, புந்நுவராளி, தன்யாசி, ஆரபி, ஆகிரி சாரங்கா, கேதார கௌளம், சௌராஷ்டிரம், செஞ்சுருட்டி பரசு, கலியாணா, பிலஹரி, பூபாளம் ஆகியவை.*

இவ்வகையான இசை வடிவங்களில் இராம நாடகக் கீர்த்தனை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இசைக் கூறுகளை உள்ளடக்கிய விலாசங்கள் நிகழ்த்தப்பட்டன. விலாசங்கள் கூடுதலான உரையாடல் வடிவத்தைக் கொண்

சோழ சாம்ராஜ்யம் சிதைந்து சிறு நாடுகள் உருவானதன் பின்னர் சிற்பம் ஓவியம் இலக்கியம் போன்றவற்றில் பல்வேறு பண்பாட்டுக் கூறுகள் பதிவாகத் தொடங்கின.

டிருந்ததை அறிய முடிகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் விலாசங்கள் மிகச் செல்வாக்குடன் இருந்ததை 'பஞ்சமுக விலாசம்', 'பிரதாப சந்திர விலாசம்', 'டம்பாச்சாரி விலாசம்' ஆகிய பிற நாடகப் பிரதிகள் வழி அறிய முடிகிறது. அப்பிரதிகள் நாடக நிகழ்த்து வடிவங்களாகச் செயல்பட்டதைக் காண்கிறோம்.

எனவே பத்தொன்பதாம் நூற்றாண்டில் கீர்த்தனைகள், விலாசங்கள் ஆகிய அரங்க நிகழ்த்து வடிவங்கள் மிகுந்த செல்வாக்குடன் தமிழ் மக்களிடம் செயல்பட்டதாகக் கூறலாம். இப்பின்புலத்தில் தமிழ் நாடக நிகழ்த்து முறைகளில் புதிய தன்மைகள் உருப்பெற்றதைப் பின்வரும் செய்தி உறுதிப்படுத்துகிறது. 'பூலோக ரம்பை' எனும் நாடகப் பிரதி குறித்து அதன் ஆசிரியர் வீரராகவ நாவலர் பின்வருமாறு கூறுகிறார். *(பூலோக ரம்பை எனும் இந்நாடகம் சென்னை மெய்டன் அச்சியந்திர சாலையில் 1905 ஆண்டு அச்சிடப்பட்டுள்ளது)*

*"பெரியோர் கலை சிரவணத்தினாலும் யுடியேன் சிற்றறிவிற்கெட்டியவாறு பூலோகை ரம்பை நாடகமெனச் செய்வித்ததை சில பாலியர்களைக் கொண்டு திரிசிரபுரத்திலும் (திருச்சி) புதுக்கோட்டை சமஸ்தானத்திலும் நடாத்திக் காண்பித்த வர்ண மெட்டுக்களில் தாளாவிகள், ஓரடிப்பதங்கள், தருக்கள், பார்ஸிவர்ணமெட்டுக்கள், டம்பாக்கள், டோம்ரிகள், கஜல்கள், தில்லானாக்கள், கியால்கள், நோட்டுகள், லாவணிகள், இந்திர சபா வர்ணமெட்டுக்கள், வெண்பாக்கள், விருத்தங்கள், இலாவணிகள், சவிகள், தும்ரிகள், வசனங்கள், மேற்கோள சாத்திரங்களிவைகளாலமைக்கப்பட்டிருக்குமிச் சரிதையை இப்படியே வசிக்கும் படியாயுள்ள நண்பர்களனை வரும் இதனை வாங்கி வாசித்து... (முகவுரை 1905)"*

## புதிய நாடக உருவாக்கம்

இவ்வகையில் உருவான கீர்த்தனை, விலாசம் ஆகிய பிற நாடக வடிவங்கள் நிகழ்த்து கொண்டிருந்த சூழலில் தமிழகத்தில் புதிய நாடக வடிவம் உருவாவதனைப் பின்வரும் செய்தி உறுதிப்படுத்துகிறது.

'மகா கியாதி பெற்ற வித்துவான்களே! நமமுடைய பூர்வீக வித்துவான்களியற்றிய வடமொழி நாடகங்களுக்கும் அதன் நிபந்தனைகளுக்கும் அவைகளை நடத்திக் காண்பிக்கவும் பார்க்கவும் மேற்பட்ட வித்வகளுக்கும் தற்காலம் நம்முடைய தமிழ்நாட்டில் சுமார் முப்பது வருஷங்களாக புராமர் கம்பெனியென்ற பெயரால் பல பேர்களால் நடத்திவரும் நாடகங்களுக்கும் உள்ள தார தம்மியங்களை என் அநுபவத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமை மிக்க மனித சமூகத்தின் பலம் புத்தகங்களும் வாசிப்புக்களுமே

நூல் பண்பாட்டையும் நூலக பண்பாட்டையும் உருவாக்க ஒன்றிணைவோம்

**Book**

**LAB**


புத்தகக் கூடம்

172 சேர் பொன் இராமநாதன் வீதி
திருநெல்வேலி
booklab@gmail.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*சிறுவயதிலிருந்தும் ஏற்பட்டதான அபிப்பிராயத்தை அறு சார்ந்து வணக்கமாயும் சுருக்கமாயும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*'நான் வடமொழியும் தென்மொழியும் முறையாய்க் கற்றவனல்லவென்றாலும் என்னுடைய சிறுவயதில் (14-வது வயதில்) நான் இங்கிலீஷ் 6 கிளாஸ் வரை கும்பகோணத்தில் வசித்து என் குடும்ப அசௌகரியத் தாலதில் நின்றுபோய் விலகிக் கொண்டவன். அந்தக் காலத் தில் நூதனமாக பூனா, கொல்லாபூர், ஸாங்கிலி முதலிய சமஸ்தானங்களிலிருந்து நம்முடைய மாகதிமை பெற்ற தஞ்சாவூர் சமஸ்தானம் அரண் மனையில் வந்து தங்கியிருந்தன. மகாராஷ்டிரம் முத*



சங்கரதாஸ் சுவாமிகள் நாடகத்தைப் பற்றிய பனுவல்கள் என்ற நூல் அண்மையில் புதுச்சேரி பல்கலைக்கழகம் சேர்ந்த வல்லமை வெளியீட்டகத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. அந்நூலில் இருந்து இக்கட்டுரை மீண்டும் பிரசுரிக்கப்படுகிறது.

*லிய பாஷைகளின் விருத்தமாகச் சில நாடக கம்பெனி யார் நாடகம் நடத்தி விசேஷ சன்மானங்களைப் பெற் றுப் பிறகு கும்பகோணமும் வந்து நடத்தி அனைவருக் கும் வெகு திருப்தியையும் ஸந்தோஷத்தையுமுண்டு பண்ணிச் சென்றார்கள். அப்போதுதான் நம்முடைய தேசவாசிகளுக்கு இந்த விதமான ஒரு அருமைத் தொழில் இருக்கிறதாய் முதலாகத் தெரிய வந்தது'.*

'பாமா விஜயம்' எனும் நாடக நூல் மதுரைத் தமிழ்ச் சங்க அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டு சென்னை யில் வெளியிடப்பட்டது (1909). இந்நூலின் முகவுரை யில் அந்நாடகத்தின் ஆசிரியர் சி.எஸ்.கல்யாண ராம அய்யரவர்கள் எழுதிய செய்திகள் மேற்கண்டவை.

## தமிழ் அரங்க மரபு

மேலே நாம் விவரித்த பின்புலத்தில் தமிழ் அரங்க மரபு என்பது, நாட்டார் மரபு சார்ந்த கூத்து வடிவம், சமஸ் கிருத செல்வாக்கு பெற்ற கீர்த்தனை வடிவம், விலாசம் போன்ற வடிவங்கள் ஆகியவற்றின் தொடர்ச்சியாகச் செயல்பட்டு வந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவான பார்சி மரபு என்பது மும்பையில் காலம் காலமாக நடை முறையில் இருந்த மரபுகளோடு பிரித் தானியர்களின் நிகழ்த்துகலை மரபு இணைந்து ஏற் பட்ட ஒன்றாகும். விக்டோரியன் நாடக மரபின் இந்திய வடிவமாகப் பார்சி மரபைப் புரிந்து கொள்ள முடியும்.

மேற்குறித்த பின்புலத்தில்தான் சங்கரதாஸ் சுவாமிகள் நாடக ஆசிரியராக உருப்பெறுகிறார். எனவே அவரது அரங்க வடிவம் என்பது நமது பாரம்பரிய கூத்து மரபு, பன்மொழிச் சூழலில் உருவான கீர்த்தனை மரபு, பாரம்பரியமாக விவாதிக்கப்பட்ட சமஸ்கிருத மரபை உள்வாங்கி உருவான விலாச மரபு ஆகியவற்றில் உள்ள கூறுகளை உள்வாங்கியதாக அமைகிறது. இத் தன்மையோடு பார்சி நாடக மரபையும் உள்வாங்கிக் கொள்கிறார். இவ்வகையான அனைத்து மரபுகளையும் உள்வாங்கும் மனநிலையுடைய நாடகக்காரராகச் சுவாமிகளைப் புரிந்துகொள்ள முடியும்.

சுவாமிகளின் நாடகம் ஒவ்வொன்றையும் மேற்குறித்த மரபுகளின் இணைவாக எவ்விதம் அமைந்திருக்கிறது என்பதை அறிய வேண்டும். இதனைப் பிரதிகளின் நிகழ்த்து முறைமைகளின் வழிதான் அறிய முடி யும். அச்சிட்ட நாடகப் பிரதியில் மேற்குறிப்பிட்ட செய்தி களை வாசிக்க முடியும். ஆனால் காட்சி வயப்பட்ட உணர்தல் சாத்தியமில்லை. இவ்வகையான பின்புலத் தில் சுவாமிகள் ஆக்கங்களை அணுகும்போது அதன் வரலாற்று முக்கியத்துவத்தை அறியமுடியும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழ் நாடகத்தின் புதிய வெளிப்பாடாகவே இவரை அணுக முடியும். இவரது வாழ்வையும் அரங்கச்செயலையும் வரலாற்றில் பதிவு செய்யும் போது மேல்குறித்த பின்புலத்தோடுகூடிய புரிதல் தேவைப்படுகிறது. பம்மல் போன்றவர்களிலி ருந்து சுவாமிகள் வேறுபடும் புள்ளிகளை இவ்வகை யில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.


கூத்தில் உள்ள ஆட்ட மரபு மற்றும் உரையாடல் மர பைச் சுவாமிகளின் நாடகம் தன்வயப்படுத்தியிருப் பதைக் காண்கிறோம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் விலாசங்களில்தான் முதன் முதல் உரையாடல் வடிவம் இடம்பெறுகிறது. இம்மரபைச் சுவாமிகள் செழுமை யாக்கித் தம் நாடகங்களில் பயன்படுத்தியுள்ளார். கீர்த் தனைகள் என்பது தமிழ் இசை மரபையும் கர்நாடக இசை மரபையும் உள்வாங்கி உருப்பெற்றவை. காலப் போக்கில் இந்துஸ்தானி மற்றும் பிரித்தானியர்களின் இசை மரபுகள் கீர்த்தனை மரபுகளோடு இணைந்தன. இவ்வகையான இணைப்பைச் சுவாமிகள் தம் நாட கங்கள் மூலம் சாத்தியமாக்கியுள்ளார்.

சுவாமிகள் தம் காலத்திற்கு முன்பு உருவாக்கி வந்த வேற்றுத் தமது நாடக ஆக்கத்திற்கு எவ்வகையில் உள் வாங்கினார் என்பதே அவர் குறித்த புரிதலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செயல்திறன் அரங்க இயக்கம் கடந்த ஐந்து மாதம் நாடகத் தயாரிப்பு தொடர்பயிற்சியை நடத்தியது. இதில் அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை உயர்தர மாணவர்கள் என 33 பேர் பங்குபற்றினர். செயல்திறன் அரங்க இயக்கத்தின் நிறைவேற்று இயக்குநர் தே.தேவானந்த் பயிற்சியை வழிப்படுத்தினார். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்பட்டது.

# 4,000 சிறுவர்கள் பார்த்த நாடகம்

செயல்திறன் அரங்க இயக்கம், கல்வியியல் அரங்கு என்ற எண்ணக் கரு அடிப்படையில் கடந்த பல ஆண்டுகளாக கல்வித்திணைக்களங்களுடன் இணைந்து பாடசாலைச் சிறார்களுக்கான சிறுவர் நாடகங்களை மேடையேற்றி வருகின்றது.

அந்தத் திட்டத்தின் கீழ், ஒரு மணிநேர மகிழ்வூட்டலுடன் உளசமூக நல்வாழ்நிலையினை கொடுக்கக்கூடிய குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகங்கள் பாடசாலைகளில் தொடர்ச்சியாக மேடையேற்றப்படுகின்றன.



'பஞ்சவர்ண நரியார்', 'கள்ளமணிக்குட்டிகள்', 'கூடிவிளையாடு பாப்பா', 'மந்திரத்தால் மழை' போன்ற சிறுவர் நாடகங்கள் கடந்த காலங்களில் மேடையேற்றப்பட்டன.

செயல்திறன் அரங்க இயக்கம் நடத்திய சிறுவர் அரங்கப் பயிற்சியில் மாணவர் அனுபவத்திற்காக குழந்தை ஆசிரியரினால் எழுதப்பட்ட 'பந்தயக் குதிரையார்' என்ற நாடகம் தற்போது மேடையேற்றப்பட்டு வருகின்றது. யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இதுவரை 4,300ற்கும் மேற்பட்ட சிறுவர்கள் இந்த நாடகத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

"மாணவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடிய இவ்வாறான நாடகங்களை அரங்கேற்றி அவர்களை மனத்தளர்வு நிலைக்கு இட்டுச்செல்ல வேண்டியது காலத்தின் கட்டாயம். நல்ல விழுமியங்கள், ஒற்றுமை, நட்பு, தலைமை பண்பு போன்றவை இந்த நாடகம் ஊடாக மாணவர்களைச் சென்று சேர்கின்றன" என்று பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்தில் பொம்மலாட்ட அரங்கு

ஆனந்த்

**கூ**த்தரங்கம் கடந்த சில ஆண்டுகளாக பொம்மலாட்டம் பற்றிய தேடலில் ஈடுபட்டிருந்தது. தென்னாசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் பொம்மலாட்ட அரங்கு சார்ந்த பல தகவல்களைப் பகிர்ந்து கொண்டிருந்தது. தேடலில் ஒரு பகுதியாக, ஈழத் தமிழ் பொம்மலாட்ட மரபும் கிளறப்பட்டது. இதுவரை வலுவான ஆதாரங்களையோ தகவல்களையோ பெறமுடியவில்லை. இருப்பினும் யாழ்ப்பாணத்தில், பாடசாலை அரங்காக - கல்விச் செயற்பாட்டிற்கு உதவும் செயற்றிட்டமாக - பொம்மலாட்ட அரங்கு காணப்பட்டிருக்கிறது. அதனைத் தன்னார்வத்தால் கற்றுக் கொடுத்து வந்த ஒருவரை இந்தத் தேடலின் பேறாகக் கண்டறிய, சந்திக்க முடிந்தது.



அந்த வீட்டில் 'நிஷா' வந்துவிட்டுப் போனதற்கான அடையாளங்கள். புயல்களுக்கு அழகாக தமிழ்ப் பெயர் வைத்தாலும் அவற்றின் வேகமும் ஏற்படும் சேதமும் குறைந்தபாடில்லை. 'நிஷா'வை எதிர்த்து நிற்க முடியாமல் முறிந்தும் பாறியும் கிடக்கும் மரங்களை வெட்டி அகற்றியபடி ஒரு மூத்தவர்.

வாசலில் வந்து நிற்கும் எஸ்.ரி.அரசுவைப் பார்த்ததும் முகம் மலர அழைத்து உபசரிக்கிறார். பழைய நினைவுகளில் மூழ்கித் திளைக்கிறார்கள் இருவரும். தன் வேலைகளை அப்படியே விட்டுவிட்டு அளவளாவ ஆரம்பிக்கிறார் நாகராஜா.

யாழ்ப்பாணத்தில், பொம்மலாட்ட அரங்கில் நீண்ட காலமாக ஈடுபட்டவர் நாகராஜா. இளைப்பாறிய சிறந்த கல்வி அதிகாரி, பல்துறை ஆற்றல் கொண்ட கலைஞர், அறிவிப்பாளர், வானொலி நாடக நடிகர்(1965), ஓவியர், என அவருக்கு முகங்கள் பல. நாடகத் துறையில் ஈடுபட்டுள்ளதோடு நாடக அரங்கக் கல்லூரியுடன் சேர்ந்து நாடகங்கள் செய்துள்ளார். பொம்மலாட்டத்திற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துருக்களை எழுதும் திறமைசாலி. பொம்மலாட்ட அரங்கிற்குத் தேவையான பொம்மைகளை உருவாக்குவதும் அரங்குகளை உருவாக்குவதும் இவருக்கு கைவந்த கலை. சிறந்த குரல்வளம் மிக்க இவர், தானே ஓர் ஆற்றுகையாளராக பொம்மைகளை அசைவிப்பதோடு பாத்திரங்களுக்கு ஏற்ற உரையாடல்களையும் சிறப்பாக வெளிப்படுத்தும் ஆற்றலுள்ளவர்.

பொம்மலாட்டம் செய்வதற்கு நிறைபயிற்சி அனுபவமும் திறனும் கருத்தொருமித்து செயல்படும் ஆற்றலும் தேவையென்கிறார் நாகராஜா. பொம்மைகளை அசைக்கின்ற வெளி பற்றிய கவனம், பொம்மைகளை அசைத்தல், உரிய உரையாடல்கள் என்பன பொம்மலாட்டத்தில் ஒருங்கே ஒரு கட்டொழுங்கில் நிகழ வேண்டும்.

தனது ஓய்வு நாட்களை பரந்து விரிந்து கிடக்கின்ற தன் வீட்டு வளவில் வேலை செய்து மகிழ்ச்சியாக களிக்கும் நாகராஜா, தான் உருவாக்கி வைத்திருந்த பொம்மைகளையும் அரங்குகளையும் எடுத்துக்காட்டி பொம்மலாட்டம் பற்றிய விரிவான விளக்கமொன்றை மிக உற்சாகமாக வழங்கினார்.

அவரது சிந்தனையிலும் மனதிலும் சிறுபிள்ளைகளே நிற்கிறார்கள். அவர்களுக்குப் பிடித்தமான பொம்மைகள் அதன் அசைவுகள் மற்றும் கதைகள் உரையாடல்கள் பற்றியே அதிகமாக விபரிக்கிறார்.

## 7 வகைகள்

பொம்மைகளை அடிப்படையாக வைத்து பொம்மலாட்டத்தை 7 வகைகளாகப் பிரிக்க முடியும் என்று நாகராஜா கருதுகின்றார். விரல் பொம்மை, வெட்டுருப் பொம்மை, அரங்குப் பொம்மை, தண்டுப் பொம்மை, கையுறைப் பொம்மை, நிழற் பொம்மை, நூல் பொம்மை என்பனவே அவை. தண்டுப் பொம்மையையும் நூற் பொம்மையையும் சேர்த்துச் செய்யும் முறையும் உண்டாம்.

சிறுபிள்ளைகளுக்கு ஏற்றதாக விரல் பொம்மை, வெட்டுருப் பொம்மை, அரங்குப் பொம்மைகளை அதிகளவில் தனது ஆற்றுகைகளில் பயன்படுத்தியுள்ளார். நாகராஜா பரம்பரையான பொம்மலாட்டக் கலைஞரல்லர். தனது ஆர்வமேலீட்டால் கற்றுக் கொண்டவர்.


1994ம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தில் நடத்தப்பட்ட பொம்மலாட்ட கருத்தரங்கிற்கு மொழிபெயர்ப்பாளராகச் சென்ற நாகராஜா அங்கு ஜேர்மனியில் இருந்து வந்திருந்த மாறா என்பவர் வழங்கிய பயிற்சிகளை நன்கு அவதானித்து எமது சூழலுக்கேற்றதான பொம்மலாட்ட அரங்கை உருவாக்கியிருக்கிறார்.

மூன்று நாட்கள் 15 ஆசிரியர்களுக்காக வழங்கப்பட்ட பயிற்சிநெறியின் தூண்டுதலால், தனது கற்பனை வளத்தையும் உள்ளூரில் கிடைக்கும் வளங்களையும் பயன்படுத்தி பொம்மைகளை உருவாக்கி அற்புதமான ஆற்றுகையை குழந்தைகளுக்காக வழங்கியிருக்கிறார்.


## ஆர்வம் முக்கியம்

கலைகளில் ஈடுபடுவதற்கு ஆர்வம்தான் முக்கியம். ஆர்வமிருந்தால் தான் புதிதாகப் பலவற்றை செய்யமுடியும். இவரது ஆற்றலை அறிந்து கொண்ட முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளரும் நாடக ஆர்வலருமான சிவானந்தன் இவரை வைத்து ஆசிரியர்களுக்கு பொம்மலாட்டப் பயிற்சிகளை 1990 காலகட்டத்தில் ஒழுங்கு செய்து நடத்தியுள்ளார். இந்தச் செயல் திட்டம் பின்னர் தொடர்ந்து முன்னெடுக்கப்படாமல் இடையில் நின்று போயிற்று என்பது வேதனைக்குரியது.

'பொம்மலாட்ட நிகழ்வுகளை பாடசாலைகளில் மட்டுமல்லாது வீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொம்மலாட்டம் ஒரு தனிக்கலை அதிலும் பொம்மைகளை உருவாக்குவது சிறப்பம்சம் என்கிறார் நாகராஜா. தன் வீட்டில் அவர் இன்னும் வைத்திருக்கும் பொம்மைகளைக் கொண்டு ஆட்டத்தை நிகழ்த்திக்காட்ட அவர் என்றும் பின்னின்றதில்லை.

களில் பிறந்தநாள் கொண்டாட்டங்களிலும் நடத்த முடியும்" என்று குறிப்பிடுகின்றார்.

பொம்மலாட்டதிற்கு சிறிய கதை அல்லது சம்பவம் தேவை. எழுத்துரு வொன்றை உருவாக்கிக்கொள்ள வேண்டும். குரல் நடிக்க வேண்டும். ஒருவர் பொம்மையை அசைக்க இன்னொருவர் உரையாடலாம். ஒருவரே அசைத்து உரையாடலாம். ஒரு பொம்மையை இரண்டு பேர் அசைப்பது முண்டு.

## கல்வியில் பொம்மலாட்டம்

யாழ்ப்பாணத்தில், ஆரம்பத்தில் அழகியற் செயற்பாடாகவே கல்வியில் பொம்மலாட்டம் அறிமுகமாகியது. பின்னர் கணிதம், சுகாதாரம், சமூகக் கல்வி போன்ற பாடங்களை இலகுவாகக் கற்பிப்பதற்கும் இதனைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

பொம்மலாட்டம் மூலம் மெல்லக் கற்கின்ற அல்லது கல்வியில் பின்தங்கியுள்ள பிள்ளைகளுக்கு மனதில் இலகுவில் பதியக் கூடியதாக சத்தங்கள் மற்றும் அசைவுகளுடன் கற்பிக்க முடியும். ஆசிரியர்கள் தமது பாடத்தை அழகியல் ரீதியாக கற்பிப்பதற்கு பொம்மலாட்டம் துணை நிற்கும். தாம் அறிந்தவற்றை பிறருக்குச் சொல்லிக் கொடுப்பதில் திறந்த மனதுடன் உள்ள நாகராஜா பாராட்டுக்குரியவர். இந்த மனப்பாங்கை கலையுலகில் காண்பது அரிது. "பிறருக்குச் சொல்லிக் கொடுப்பதில்தான் எனக்கு ஆர்வம்" என்று அடிக்கடி கூறுகிறார்.

தனது பல்பரிமாண ஆற்றலால் தனித்துவமான பொம்மைகளை உருவாக்கி சிறந்த ஆற்றுகைகளை நிகழ்த்திய நாகராஜா, கல்வி அதிகாரிகள் இக்கலையை ஆசிரியர்கள் மத்தியில் மேலும் கொண்டு செல்லவேண்டும். அதற்கான தொடர் நடவடிக்கை மிக முக்கியமென்று குறிப்பிடுகிறார்.


சிறுவர்களுக்கு ஏற்றதான கதைகளை பொம்மலாட்டமாக்கி, அவற்றை இறுவட்டாக வெளியிடுவது மிகப் பயனுள்ளது என்று கருதும் இவர், அதற்கான வாய்ப்புகள் கிடைத்தால் சாத்தியமாக்கவும் ஆர்வமாக உள்ளார். கற்றுக் கொடுக்கத் தயாராக உள்ள கலைஞனிடம் தேடிச்சென்று கற்க ஆட்கள் இல்லை என்பதுதான் வேதனையான யதார்த்தம்.

> பொம்மலாட்டம் செய்வதற்கு நிறையவே அவதானிப்புத் திறனும் கருத் தொருமித்து செயல்படும் ஆற்றலும் தேவை. பொம்மைகளை அசைக்கின்ற வெளி பற்றிய கவனம், பொம்மைகளை அசைத்தல், உரிய உரையாடல்கள் என்பன பொம்மலாட்டத்தில் ஒருங்கே ஒரு கட்டொழுங்கில் திகழ வேண்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமண அழைப்பிதழ்கள்
ONLINE PRINTING SHOWROOM
CARDS
www.andradesigns.com
யாழ் நகரில் முதல் முறையாக இணையத்தளத்தினூடாக
உயர்தரமான திருமண அழைப்பிதழ்களின் தெரிவு...
www.andradesigns.com
www.andradesigns.com
021 4590288
ANDRA
DIGITAL IMAGE

# எவ்வளவு பாராட்டினாலும் தகும்

கூத்தரங்கம் இதழ்கள் 27, 28 ஆகியவற்றை ஒன்றாக வாசிக்கக் கிடைத்தது. முதலில் அவ்விதழ்களின் வடிவ நேர்த்தி (Layout) என்னைக் கவர்ந்ததைக் குறிப்பிட்டாக வேண்டும். இங்கு நிலவும் சூழல் நமது பண்பாடு விழுமியம் போன்ற அம்சங்களை எளிமையாகப் பிரதிபலிக்கும் வகையில் குறைந்தளவு பக்கங்களுடன் முழு நிறைவான உள்ளடக்கத்தோடு அமைந்திருந்தமை பரவசத்திலாழ்த்தியது.




அடுத்து முக்கியமாக எடுத்துக்காட்டப்பட வேண்டியது ஆசிரியர் தலையங்கமாகும். இதழ் 27ல் தமிழ் அரங்கும் புலமைத்துவமும் குறித்து "துரதிர்ஷ்டவசமாக பேராசிரியர் கா.சிவத்தம்பி போன்றோரின் இடைவெளியை நிரப்பக் கூடிய ஆளுமைகளை இன்று வரை ஈழத்துத் தமிழ் அரங்கில் இனங் காண முடியவில்லை. அதற்கான ஏதுநிலை கூட பல்கலைக்கழகச் சூழலில் இல்லை என்பது கவலைக்குரியது. தமிழரங்கு தன் முன்னுள்ள இன்றைய சவாலை வென்றெடுத்தாக வேண்டும். இதற்காக தமிழ் அரங்கில் காணப்படும் புலமைத்துவக் கையறு நிலையை இல்லாது செய்து புலமைத்துவ இடையீடுகளை அதிகப்படுத்த வேண்டியது அவசியம்" என்றும் இதழ் 28ல், "ஆரோக்கியமற்ற இயங்கு நிலைகளே முன்னுதாரணங்களாகவும் அதிகார பூர்வமானவையாகவும் வந்துவிடுகின்ற அபாயமும் அவலமும் உண்டு. இதனை தவிர்த்து தமிழ் அரங்கின் இன்றைய தேக்க நிலையைப் போக்குவதற்கு கண்காணிப்பு முறை அவசியமாகின்றது" என தமிழ் அரங்கிற்கான கண்காணிப்பு பொறிமுறை தொடர்பில் குறிப்பிட்டிருப்பதும் கவனிப்புக்குரியவை.

பேராசிரியர் அமைதி அரசுவுடனான நேர்காணலில், "இலங்கையில் இருந்து வந்த இளைய பத்மநாதன் தான் எமக்கு அரங்கப் பாரம்பரியத்திற்கான அடிப்படைகளைச் சொல்லிக்கொடுத்தார்" எனக் குறிப்பிட்டிருப்பதும் பொன்னியம்மன் நாடகப் பிரதியாக்கம் குறித்து இடம்பெறும் விவரிப்பும் முக்கியமானவை.

சென்னையில் இருந்து தேவானந்த் எழுதியுள்ள காலக் கனவு, மூன்றாம் பால் நிலையினரின் சங்கீதக் கதிரை என்னும் இரு ஆற்றுகை நிகழ்வுகள் பற்றிய குறிப்புகளும் உண்மையில் புதிய களம் புதிய அனுபவம்தான். அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'குழந்தை பாவனை செய்யும்', 'பண்பும் பயனும்' என்னும் இரு நாடகப் பிரதிகளும் ஆழ்ந்த நோக்கில் வியக்க வைத்தன. இத்தகைய பிரதிகளை ஆற்றுகை செய்வதே தற்காலத்தின் தேவைப்பாடாக முன்னெழுகின்றது. மேலும் பாவைக் கூத்து பற்றிய தொடர் நேர்த்தியானதாக அமைந்திருந்தது.




'மண்சுமந்த மேனியர்' பற்றிய, பேராசிரியர் கா.சிவத்தம்பியின் விமர்சனம் அவ்வாற்றுகை குறித்த நேர்மையான சில கருத்துக்களை வலுவாக முன்வைத்துள்ளது. எழுதப்பட்டிருக்கும் காலத்தை முன்னிறுத்திப் பார்க்கும் போது இந்த விமர்சனத்தின் ஆவணப் பெறுமதி அளவிடற்கரியது என்றேபடுகிறது. தமிழரின் அரசியற் போராட்டத்திற்கு புதிய பரிமாணம் கொடுத்த 'மண்சுமந்த மேனியர்' போன்ற பிரதிகளை இன்றுள்ள நிலையில் ஆற்றுகை செய்ய முடியுமா? என்ற கேள்வியும் கூடவே எழுகிறது. "நாடகத்தின் வலிமை நடிப்பின் சமமின்மைகளை மறைத்து விடுகிறது" எனும் பேராசிரியரின் கூற்று நயமாகப் பல விடயங்களை எடுத்துக்காட்டுகிறது. இது போன்ற விமர்சனங்களை தொடர்ந்து பிரசுரியுங்கள்.


— இராகவன்

கூத்தரங்கத்திற்கான ஆக்கங்களும் ஆய்வுக் கட்டுரைகளும் வரவேற்கப்படுகின்றன. வெளியாகும் கட்டுரைகள் ஆக்கங்கள் செவ்விகள் பற்றிய கருத்துப் பகிர்வுகளும் விமர்சனங்களும் பெரிதும் விரும்பப்படுகின்றன. அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கோ koothharangam@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ அவற்றை அனுப்பி வைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னையில் ஈழ நாடகப் பாடல்கள்




சென்னை கலைக் குழு தனது 25 ஆவது ஆண்டு தொடக்க விழாவை 'வெறுப்புணர்வுக்கு எதிராக கலைஞர்களின் ஒன்றிணைவு' என்ற தலைப்பில் சென்னை நகரில் நடத்தியது. இதில் செயல்திறன் அரங்க இயக்கத்தின் சார்பில் ஈழத்து நாடகப் பாடல்கள் பாடப்பட்டன.

யாழ். பல்கலைக்கழக இசை விரிவுரையாளரும் நாடக இசையமைப்பாளருமான த.றொபேர்ட்டும் செயல்திறன் அரங்க இயக்கத்தின் நிறைவேற்று இயக்குனர் தே.தேவானந்தும் இணைந்து இந்த நிகழ்வை வழங்கினர்.

## வெறுப்புணர்வு எதிர்ப்பு

இந்தியா உட்பட உலகெங்கும் மக்களிடையே வெறுப்புணர்வு பெருகி, அதனடிப்படையில் முரண்பாடுகள் வளர்ந்து வரும் நிலையில் அதற்கு எதிராகக் கலைஞர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் விதத்தில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



நிகழ்வை கூத்துப்பட்டறை ந.முத்துசாமி வெறுப்புணர்வுக்கு எதிராக ஓவியர்கள் வரைந்த ஓவியங்களைப் பார்வையிட்டதுடன் ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து கூத்துப்பட்டறைக் கலைஞர்களின் பறை இசை இடம் பெற்றது. ரீதத்திற்கு மிகச் சிறந்த பயிற்சியான பறை இசை முதலில் விறைப்பாக நின்றவர்களைக்கூட நேரம் செல்லச் செல்ல மெல்ல அசைய வைத்தது.

நிகழ்வுக்கு வந்திருந்த கலைஞர்கள் பாடல்களைப் பாடினார்கள். 25 ஆண்டுகளாக சென்னைக் கலைக் குழுவில் இயங்கிய கலைஞர்களைப் பாராட்டும் விதத்தில் குழுவின் மூத்த கலைஞரான பி.ஏ.விஸ்வநாதன் கௌரவிக்கப்பட்டார்.

'சென்னை கலைக்குழு இயக்குனர் பிரளயனுக்கு மாநிலம் கடந்து தேசிய அளவில் அங்கீகாரம் கிடைத்துள்ளது. ஒரு சிலருக்குத்தான் இந்தப் பெருமை கிடைக்கும். திராவிட இயக்கத்துக்கு எம்.ஆர்.ராதா என்றால் பொதுவுடைமை இயக்கத்துக்கு பிரளயன். அவரால் எம்.ஆர்.ராதாவையே மிஞ்ச முடியும் அந்த நிலைக்கு அவர் வரவேண்டும்' என்று தெரிவித்தார் கலைஞர் செந்தில் நாதன்.




இந்து பத்திரிகையின் ஆசிரியர் என். ராம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். கருத்துச் சுதந்திரத்தையும் வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும் பாதுகாப்பதுதான் இன்றுள்ள மிக முக்கிய சவால் என்றார்.

## உறுதிமொழி

வெறுப்புணர்வுக்கு எதிராகக் கலைஞர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது என்று உறுதிமொழி வழங்கும் பிரகடனம் ஒன்றை வெளியிட்டார் ராம். ஏனைய கலைஞர்கள் அதனை வழிமொழிந்தனர்.

சினிமா தொகுப்பாளரும் குறும்பட இயக்குனருமான லெனின், இசையமைப்பாளர் ரவி தேவேந்திரன், ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

பிரசன்னா ராமசாமியின் 'நதியின் கருணை' என்ற ஆற்றுகையை சினிமா நடிகை ரோகிணி மற்றும் நிக்லா ஆகியோர் இணைந்து வழங்கினர். பிரீத்தி ஆத்ரேயா, தேவிகா மோகன், சங்கீதா ஈஸ்வரன், மிர்ணாலினி ஆகியோர் வன்முறை மற்றும் வெறுப்புணர்வு என்பவற்றை கருவாகக் கொண்ட புதிய/நவீன ஆற்றுகை நிகழ்வு ஒன்றை வழங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மனிதர்களுக்கு மதம் பிடிக்கும்போது அவர்கள் என்ன செய்வார்கள் என்பதைப் படம்பிடித்துக் காட்டியது சென்னைக் கலைக்குழுவினரின் 'இடம்' நாடகம். சாந்தியும் சமாதானமும் என்ற பெயரில் நுழைகிறார்கள் சாமியார்கள்.

# வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கு ஒரு முழுமையான எடுத்துக்காட்டு

**நினைப்பதைப் பட்டவர்த்தனமாக வெளிப்படையாக பச்சையாகப் பேசும் சுதந்திரத்தையும் வெளியையும் தமிழக அரங்கு கொண்டிருக்கிறது. இந்த நிலை பிரமிக்க வைக்கிறது. அந்தத் துணிவு எங்கிருந்து வருகிறது? என்பது உண்மையில் வியப்பு நீங்காக் கேள்வி**

தேவானந்த்

செ சென்னைக் கலைக்குழுவின் 25வது ஆண்டு தொடக்க விழா சென்னை தி.நகரில் நடந்தது. அதில் சென்னைக் கலைக்குழுவின் இயக்குனர் பிரளயனின் எழுத்துரு, நெறியாள்கையில் 'இடம்' என்ற இருபது நிமிட நாடகம் மேடையேற்றப்பட்டது.

சென்னைக் கலைக்குழு, மக்களிடம் நாடகத்தைக் கொண்டு செல்வதற்கு வீதி நாடகங்களை வலுவான சாதனமாகப் பயன்படுத்தி வருகின்றது. வெளி சார்ந்த விளைவுகள் பற்றிய அறிவும் அனுபவமும் சார்ந்து வீதி நாடகங்களை அது நிகழ்த்தி வருகிறது.

சென்னைக் கலைக்குழுவினர், ஒடுக்கப்பட்டவர்களின் குரலாக அரங்கைப் பார்க்கிறார்கள். சமூக அநீதிகளை கேள்விக்குட்படுத்துவதற்கான ஒரு ஆயுதம் அரங்கு என்று நம்புகிறார்கள். இடதுசாரி சிந்தனைப் புலத்தில் தாம் கேள்விக்குட்படுத்த விரும்புவதையெல்லாம் துணிந்து அரங்க வெளியில் பேசுகிறார்கள். தொடர்ந்து 25 ஆண்டுகள் சளைக்காமல் உழைத்து வருகின்றார்கள்.

'இடம்' நாடகத்தில் இவர்கள் எடுத்துக் கொண்ட விடயம் குஜராத் மதக்கலவரம், மதத்தின் பெயரால் நடந்த வெறியாட்டம் பற்றியதாகும்.

இந்துத்துவா தத்துவத்தில் பக்தர்களுக்கு வெறியூட்டி காவிகள் நடத்திய அக்கிரமம் (குஜராத் வன்செயல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு பட்டவர்த்தனமாக, வெளிப்படையாக, பச்சையாகப் பேசப்பட்டது. மேடைக்கு காவி உடை தரித்து, சூலம் கம்புகளுடன் வட்டமாக தாள வாத்தியம் சகிதம் வரும் சாமியார் கூட்டம் பக்திப் பாடல்களைச் சொல்லிக் கொடுத்து பக்தர்களை உருவேற்ற முயற்சிக்கிறது. அது பயன் அளிக்காமல் போகவே கேக்கைப் பிரசாதமாகக் கொடுத்து வெறியேற்றி முஸ்லிம்களை அழிக்க ஏவி விடுகிறார்கள். கைகளில் இருந்த தடிகள் கைப்பொருளாகவும் மேடைப் பொருளாகவும் அழகாகப் பயன்படுத்தப் படுகின்றன.

### குஜராத் வன்செயல்

வெளியேறியோர் காந்தி பிறந்த மண்ணுக்குச் சென்று (குஜராத்), வீடு வீடாக முஸ்லிம்களை அழைத்து துவம்சம் செய்கின்றனர். அதுமட்டுமல்லாமல் பல்லின சங்கமம் நிறைந்த இந்திய மனச்சாட்சியையும் இந்துத்துவம் அழித்துவிட நினைக்கிறது. அது முடியவில்லை; அல்லது முடியாது என்பதாக நாடகம் நிறைவு பெறுகின்றது.

போன்ற அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கும். அதற்குள் இருந்து அல்லாஹு அக்பர் ஒலி மெல்ல வந்து கொண்டிருக்கும். சூலத்துடன் வேட்டையாடித் திரியும் சாமியார்கள், தப்பித்து ஓடும் மனச்சாட்சி மற்றும் காவி உடையுடன் வெள்ளை முகமூடி அணிந்த கொடூரத்தைக் காட்டும் படிமம் என்பன மனதில் நீங்காக் காட்சிகள்.

### வீதி நாடக அளிக்கை முறை


இந்த நாடகம் வீதி நாடக அளிக்கைப் பண்புகளை அதிகம் கொண்டிருந்தது எனலாம். குறிப்பாக மூன்று பக்கம் சூழவுள்ள பார்வையாளர்களுக்கான வடிவமைப்பையும் அளிக்கை முறையையும் கொண்டிருந்தது. வீதி நாடகத்தில் வரன்முறையான நாடக வடிவமைப்பு அல்லது கட்டமைப்பைக் காண முடியாது. முரண், முரண் விடுவிப்பு, வளர்ச்சி, உச்சம் என்ற அரிஸ்டோட்டலின் தத்துவத்தைத் தேட முடியாது. இங்கு புரிதலுக்குத் தடையாக எதுவும் இல்லை எனலாம்.

வெறுப்புணர்வுக்கு எதிரான வலுவான குரலாக 'இடம்' நாடகம் அமைந்திருந்தது. ஈழத்தின் கட்டிறுக்கமான ஒரு சூழலில் இருந்து வந்திருந்த எனக்கு சென்னையில் காணப்பட்ட 'கருத்துச் சுதந்திர வெளி' பிரமிப்பாக இருந்தது. அதிலும் நாடக வெளியில் நாம் சொல்ல நினைப்பதையெல்லாம் சொல்லிவிடுகின்றார்களே என்கிறபோது வியப்பாக இருந்தது.

### ஈழத்தில் நிலை

எம்மைப் பொறுத்த வரையில் சில விடயங்கள் 'மிகையுணர்வு' மிக்கவை என்று வகைப்படுத்தி அவை பற்றிப் பேசுவதில்லை என்று வைத்திருக்கின்றோம். அல்லது பேசக் கூடாது என்று நினைத்திருக்கிறோம். அதில் சமயம், சமயப் பூசாரிகள், பிரசங்கிகள் என்ற விடயங்களும் அடங்கும். அதனைப் பேசுகின்ற போது மிகக் கவனமாக நிதானமாக இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொள்வோம். இதனால் சொல்ல வந்ததை விட்டுவிடுகின்ற அபாயத்தையும் சந்தித்திருக்கின்றோம்.

இறுதியில் பறை அறைவோன் எல்லோரும் எங்கும் எப்போதும் மகிழ்வாய் வாழலாம், உண்ணுகின்ற உணவை வைத்து வேறுபடுத்துகின்ற பிரிப்பு மற்றும் ஜாதி, மதம் என்ற பிரிப்பது தேவையற்றது என்பதாகக் கூறுகிறான். பின், எல்லோரும் இணைந்த மகிழ்வான சூழலை ஆடல் மற்றும் பறை இசை மூலம் வெளிப்படுத்தினார்.



சிறுபான்மையினரை நசுக்கும் பெரும்பான்மையிடம் இருந்து தப்பித்து ஓடும் மனச்சாட்சி. தாங்கள் வெற்றிகொள்ளும் தந்திரங்கள்.

மேடையில் மனித உடலே முக்கியமான மூலதனமாகப் பயன்படுத்தப் பட்டது. வீடுகளின் கதவுகளாக நடிகர்களே நின்றார்கள். இடுப்பில் கட்டிய துணி பல்வேறு வகையான வேட உடைகளாக மாறியது.

வெறிபிடித்து இந்துக்கள் முஸ்லிம்களை அழிக்கின்ற காட்சிப் படிமம் மிக அற்புதமானது. மேடையெங்கும் காவித்துணியால் மலைகள்


மிக எளிய உரையாடல், சீரான அசைவியக்கம், சிறிய கரு என்று சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் தன்மை காணப்படுகிறது. நடிகர்கள் கட்டு விடுதலையாகியிருந்தார்கள். ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் செயற்பட்டார்கள். மேடையைப் பயன்படுத்தும் ஆற்றலுடன், உடல் மொழியின் வலுவுணர்ந்தவர்களாகவும் இருந்தனர்.

ஆனால் சென்னைக் கலைக்குழு வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி ஒட்டுமொத்த இந்து மதத்தையும் கடுமையாக விமர்சிப்பது எப்படி? அந்தத் துணிவு எங்கிருந்து வருகின்றது? என்பது உண்மையில் வியப்பு நீங்காக் கேள்வியாகத் தான் எம்முன் நிற்கிறது.

இருப்பினும் ஒரு பகுதியினரது கொள்கைகளும் நடைமுறைகளும் பிறழ்வாக இருக்கிறது என்பதற்காக பொதுப்படையாக ஒரு மதம் சார்ந்த எல்லோரையும் குற்றஞ்சாட்டுவது விமர்சிப்பது என்பது சரியானதா? அது குற்றம் செய்யாதோரைப் புண்படுத்தாதா? என்ற கேள்வியும் கூடவே எழுகிறது. இது விடுதலை சார்ந்த அரங்கின் பண்பென்றாலும் குற்றசாட்டு, வாதப் பிரதிவாதங்களுடன் நடுநிலைப் பார்வையாளரும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் கொடுக்கப்படலாமா. அதற்கான வாய்ப்புக்கள் உள்ளனவா என்றும் எண்ணத் தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எமது பண்பாட்டுத் தளத்திலிருந்து நாடகம் உருவாக வேண்டும்



நேர்கண்டவர் தேவானந்த்

தமிழ் நாட்டின் இளம் அரங்கவியலாளர்களில் முக்கியமானவர் கலாநிதி ச.முருகபூபதி. மதுரையைச் சேர்ந்தவர். கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக நாடகத்துறையில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். கல்லூரி ஒன்றில் பகுதி நேரமாக நாடகம் கற்பிக்கிறார். பாண்டிச்சேரி மத்திய பல்கலைக்கழகம் தஞ்சைப் பல்கலைக் கழகம் என்பவற்றில் நாடகத் திற்கான முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்களைப் பெற்றுள்ளார். பரிசோதனை அரங்க முயற்சிகள் ஊடாக நாடக நிலம், நாடக உடல், உடல் மொழி என்பவற்றைப் பண்பாட்டுத் தளத்திலிருந்து தேடமுற்படும் ஒருவர். டிசெம்பர் 2008ல் 'செம்மூதாய்' என்ற நாடக நூலை வெளியிட்டுள்ளார். கூத்தரங்கத்திற்காக சென்னையில் அவர் வழங்கிய நேர்காணல் இது.

"உங்களது நாடகச் செயற்பாட்டுக்கான அடித்தளத்தை எங்கிருந்து பெற்றுக்கொண் டீர்கள்?"



"எங்கள் குடும்பத்திற்கு பாரம்பரியமாக நாடகத் தொடர்புண்டு. என் அண்ணன் மார்களான கோணங்கி, தமிழ்ச்செல்வன் போன்றோர் மதுரை யில் இயங்கி வந்த திருஷ்டி கலைக் குழுவில் இணைந்து செயற்பட்டார்கள். எங்கள் வீட்டில் சனி, ஞாயிறு தினங்களில் ஒத்திகைகள் நடக்கும். நான் அப்போது ஆறாம் வகுப்பு படித்துக் கொண் டிருந்தேன். ஒத்திகைகளைப் பார்ப்பேன்.

"பாடசாலையில் படிக்கும் போதும் நாடகத்தில் ஆர்வமாக ஈடுபட்டிருக்கிறேன். பிளஸ் 2 படிக்கும் போது தெருவெளி நாடகக் கலைஞர் சப்தா ரஸ்மி அடித்துக் கொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டோம். அது எமது மனதைப் பாதித்த. நாமும் ஏதாவது செய்யவேண்டும் என்று நினைத்து சப்தா ரஸ்மி கலைக்குழு ஒன்றை அமைத்து வீதி நாடகங் களைப் போட்டோம். அப்போது வீதி நாடகமென் றால் என்னவென்று தெரியாது. ஆனால் நாங்கள் நினைத்த கருத்தை சொல்கிறோம்.

"பிறகு பட்டப்படிப்புக்காக பிஏ வரலாறு செய்கி றேன். பின் எம்ஏ பாண்டிச்சேரியில் படிக்கிறேன். அப்போதுதான் எனது நாடகப் பார்வையில் மாற் றம் ஏற்படுகிறது. இந்த மாற்றத்துக்குத் தூண்டு தலாக நாடகப் பள்ளி இருந்தது. ஆனால் அதிக மான விடயங்களை நாடகப் பள்ளிக்கு வெளியில் இருந்துதான் பெற முடிந்தது. அதன் பின்னர் நாட காங்களை எழுத ஆரம்பித்தேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடகக் கல்வி

"நாடகக் கல்வி மூலம் நீங்கள் எதைப் பெற்றுக் கொண்டீர்கள்?"

"நான் எதிர்பார்த்துப் போனதைவிட பாதியிலும் பாதி தான் அங்கு கிடைத்தது. அங்குள்ள நாடகப் பாடத்திட்டம் மேற்கத்தேயத்தை அப்படியே பிரதி பண்ணியதாக இருந்தது. தேசிய நாடகப் பள்ளியில் உள்ள அதே பாடத்திட்டம்தான் இருந்தது. அது மேற்கத்தைய உடலைத்தான் உருவாக்க முயற்சிக்கிறது. இடையிடையே கிராமிய நாடகம் (Folk theatre) பற்றிப் பேசுகிறார்கள்.

> பண்பாட்டு கவனமிக்க மாணவர்களை உருவாக்குவதற்கு ஏற்றதான பாடத்திட்டம் பல்கலைக்கழகங்களில் உருவாக்கப்படவேண்டும். மேற்கத்தேயத்தை நாம் அப்படியே வைத்துக்கொண்டிருக்கத் தேவையில்லை. அதை ஒரு பகுதியாக மட்டும் வைத்திருக்கலாம்.

"பண்பாட்டு கவனமிக்க மாணவர்களை உருவாக்குவதற்கு ஏற்றதான பாடத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். மேற்கத்தேயத்தை அப்படியே வைத்துக்கொண்டிருக்கத் தேவையில்லை. அதை ஒரு பகுதியாக மட்டும் வைத்திருக்கலாம்.

"பண்பாட்டு கவனமிக்க உடல் பற்றியும் வெளி பற்றியும் மாற்றம் ஏற்படவேண்டும். இப்போது நிறைய பேர் நாடகம் படிக்கிறார்கள். ஆனால் எத்தனை பேர் நாடகம் செய்கிறார்கள்? நீங்களே சொல்லுங்கள் பார்ப்போம்?

## தூரம் அதிகம்

"நாம் போகவேண்டிய தூரம் அதிகம். கிராமங்களில் நேர்த்திக் கடனுக்கு நாடகம் போடுதல், அதனால் மழை பெய்கிறது என்று நம்புதல், இந்த விடயங்களில் குடும்பங்களுக்கு உள்ள தொடர்பு போன்ற விடயங்களை எல்லாம் ஊடறுத்துப் போய் கற்க வேண்டிய தேவை இருக்கிறது. ஆனால் இவற்றை சடங்குசார்ந்தது என்ற ஒரு பொது வார்த்தையைப் போட்டு மூடிவிடுகிறோம். அப்படி இல்லாமல் அதற்குள் பயணிக்க வேண்டும்.

"பெரிய நாடக மேதைகளான குரொட்டொவ்ஸ்கி, ஆட்டு வார்ட் போன்றவர்கள் எங்களது பண்பாட்டிலிருந்து தான் அரங்கைத் தேடுகிறார்கள். குரொட்டொவ்ஸ்கி கேரளாவரை வந்து நாடகத்தின் உயிரைத் தேடியிருக்கிறார். தான் இறந்த பிறகு தனது சாம்பலை இந்தியாவில் தூவ வேண்டும் என்று சொல்கிறார். ஆனால் நாங்கள் அதைக் கவனிக்கவில்லை. எங்கள் உடம்புக்குள் இருப்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். ஒரு மேற்கத்தைய காரன் சொல்வதை மட்டும் நாங்கள் ஏன் கேட்கவேண்டும். இதையெல்லாம் நாடகக் கல்வி கருத்திற் கொள்ளவேண்டும். கல்லூரிகளில் இவை பற்றிய ஆய்வுகள் கற்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அப்போது தான் பண்பாட்டுக் கவனமுள்ளோர் உருவாவார்கள்."

"சென்னையில் உங்கள் நாடகப் பணி பற்றிச் சொல்லுங்கள்?"

"நான் பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகத்தில் 92/93ல் படித்துக் கொண்டிருக்கும்போது கருணாப் பிரசாத்துடன் சேர்ந்து சென்னையில் ஐந்து நாடகங்கள் செய்திருக்கிறேன். ஐந்து வருடங்கள் செயற்பட்டோம். ஒரு கட்டத்தில் எங்களை நகரம் அநாதையாக்கிவிடும். நகரம் எப்போதும் தோற்கடித்துக் கொண்டே இருக்கும். அதனால் ஏன் இங்கிருந்து நாடகம் செய்ய வேண்டும் என்ற நினைப்பு எழத் தொடங்கியது. இதிலிருந்து தப்பித்து மதுரைக்குப் போனேன்.

## ஐந்து நாடகங்கள்

"சென்னையில் இருந்தபோது 'சரித்திரத்தின் அந்த மியூசியம்', 'தனித்திருக்கப்பட்டவர்கள்', 'மரண வீட்டின் குறிப்புகள்', 'கதைக் கோமாளிகள்', 'கூந்தல் நகரம்' (ஒரு பகுதி மட்டும்) போன்ற நாடகங்களை 'வெறுவெளி'யில் போட்டோம். 'சரித்திரத்தின் அந்த மியூசியம்' நாடகம் போர் பற்றிப் பேசுவது. உலகமே வதை முகாம் என்ற இடமும் பிணங்கள் பிணமொன்று பேசுவதாகவும் கேள்வி கேட்பதாகவும் பதில் வழங்குவதாகவும் மனித இருப்புப் பற்றிப் பேசுகிறது அந்த நாடகம்.

'தனித்திருக்கப்பட்டவர்கள்' நாடகத்தில் உலகம் பூராகவும் மண்ணுக்காகப் போராடும் போராளிகள் பற்றிப் பேசப்படுகிறது. அவர்கள் வெறுமனே ஆயுதங்களை மட்டுமா தூக்கிச் செல்கிறார்கள்? வேறெதையும் இல்லையா? என்று கேட்கிறது. அவர்களின் கடந்த கால நினைவடுக்கில் இருந்து பேசுவார்கள். தொலைத்தவர்களைக் கண்டுகொள்வார்கள்.

'மரண வீட்டின் குறிப்புகள்' என்ற நாடகம் குரொட்டொவ்ஸ்கியின் நாவலொன்றை அடிப்படையாகக் கொண்டது. சிறையில் உள்ள கைதிகள் அதில் இருந்து தப்பிக்க நினைக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு நாடகம் செய்கிறார்கள். அந்தப் பாத்திரங்கள் ஊடாகத் தப்பிக்கிறார்கள். சிறைக் கூடத்தின் கொடுமையும்

> நாடக மேதைகளான குரொட்டொவ்ஸ்கி, ஆட்டு வார்ட் எல்லாம் எமது பண்பாட்டிலிருந்துதான் அரங்கைத் தேடுகிறார்கள். குரொட்டொவ்ஸ்கி கேரளாவரை வந்து நாடகத்தின் உயிரைத் தேடியிருக்கிறார். தான் இறந்த பிறகு தனது சாம்பலை இந்தியாவில் தூவ வேண்டும் என்று சொல்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டப்படும். பெண்ணாக நடித்தவருக்கு குழந்தை பிறக்கும். அக்குழந்தை யோசுநாதர். இதில் தார்ப் பீப்பாக்கள் மேடையில் காட்சிப் பொருளாக இருக்கும்.

"கதைக் கோமாளி'களில் கதை சொல்லும் மரபு பற்றிச் சொல்லப்படுகிறது. கதைக்குள்ளே கதையொன்று நகர்ந்து போகும். இதனைவிட குழந்தைகள் நாடகங் கள் சிலவற்றையும் சென்னையில் செய்திருக்கிறோம்.

"மதுரையில் நடக்கும் நாடகப் பணிகள் பற்றிச் சொல்லுங் கள்?"

"மதுரையில் நாடக நிலத்தைக் கண்டுபிடிக்க முயற்சிக் கிறோம். மதுரையில் நிறைய நாடக சபாக்கள் இருந் தன. மதுரை ஒரு பண்பாட்டுத் தலைநகரம். கூத்தாடும் போது நல்லதங்காள் பாத்திரம் கட்டுவதை முக்கிய மானதாகக் கருதுகிறார்கள். உன்னதமானதாக உணர் கிறார்கள். அந்த உன்னத நிலைக்குப் போய்ப் போய் வருகிறார்கள். அந்த நிலத்தைத் தேடிப் போகிறோம்.

## நாடக உருமாற்றம்

"நல்லதங்காள் கோயில் இருக்கிற காட்டுப் பகுதிக் குள்ளே போய் கோயில் முற்றத்தில் ஒத்திகை பார்க்கி றோம். மேடையில் நான்கு தூண்களுக்கிடையில் ஒத்திகை பார்க்கும் போது மட்டுப்பாடுகள் இருக்கும். அதிலிருந்து வெளிக்கு வரும்போது ஒரு ஏகாந்தம் இருக்கும். மட்டுப்பாடு இருக்காது.


யாழ் நகரின் மத்தியில்
ஓர் புதிய உதயம்
மாணவர்களுக்கு
ஓர் நற்செய்தி
அன்னை
புத்தக சாலை
ஆரம்ப வகுப்பு முதல் அனைத்து வகுப்புகளுக்குமுரிய பிரபல ஆசிரியர்களின் தமிழ், ஆங்கில (English medium) மொழி மூலமான புத்தகங்கள், பயிற்சிகள், வினாப்பத்திரங்கள், மருத்துவ, தமிழ், ஆங்கில, சிங்கள அகராதிகள், காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள், இலங்கை, இந்திய நாவல்கள், சஞ்சிகைகள் மற்றும் உங்கள் தேவைகள் அனைத்தையும் நீங்களே தெரிவு செய்து பெற்றிடக் கூடிய வகையில் (விசாலமான இடவசதி) காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
பிந்திய பதிப்புகளை முந்திப் பெறக்கூடிய வகையில் விரைவான விநியோகம், வினாப் பத்திரங்களை தபால் மூலம் பெறக்கூடிய வசதி, நியாய விலை அத்துடன் விசேட விலைக் கழிவு.
இல 7, ஆஸ்பத்திரி வீதி
நவீன சந்தை, யாழ்ப்பாணம்


"அங்கிருந்து செந்தோரிக்கு வருகிறோம். அதுவொரு பழைய பண்பாட்டு இடம். நிலத்துக்கடியில் பண்பாட்டுச் சின்னங்கள் இன்னமும் கிடக்கின்றன. அதில் நாடக நிலம் உருமாறுகிறது. இயற்கையாகவே அந்த நிலம் உருமாற்றம் பெறுவதைக் கண்டுபிடிக்கிறோம். அதற் கேற்ப எங்களது நாடகமும் உருமாற்றம் பெறுகிறது.

"நாங்கள் ஒவ்வொரு இடத்திலும் நாடகம் செய்யும்போது நாடக நிலம் எமக்குப் பின்னாலேயே வருகிறது. செந்தோரி யில் நாடகம் முடியுது. மக்களுக்கு ஒரு மாதத்திற்கு முன்னமே நாடகம் பற்றி அறிவிக்கிறோம். அந்த வெளி தொடர்பான எண்ணத்தோடு மக்கள் தமது மட்டுப்பாடு கள் கடந்து வருகிறார்கள். முதன் முதலில் போடும்போது 2000 பேர் பார்க்க வந்தார்கள். பின்னர் குறைவடைந்து இப்போது ஆயிரம் பேர் நிரந்தரமாக வருகிறார்கள்.

## அதுவாக மாறுதல்

"உருமாறும் நிலத்தில் பச்சோந்தி போன்று நாமும் மாறுகி றோம். பச்சோந்தியை நாம் எதிர்மறையாகவே கேள்விப் பட்டிருக்கிறோம். உண்மையில் அது மரத்துக்கு கீழே போகும்போது, மணலுக்கு அருகே போகும்போது அதுவாக மாறிவிடுகிறது. அப்போதுதான் அவற்றுடன் நட்புக் கிடைக்கின்றது. தன்னைத் தொலைத்து அதுவாக மாறுதல் நடக்கிறது. அதுவொரு உன்னத நிலை. அது எமக்குப் பிழையாகவே சொல்லப்பட்டு வந்திருக்கிறது. இவ்வாறுதான் நாடக நிலம் பற்றிய சிந்தனை வருகிறது. கலை நிலம் மாறும்போது உடல், மொழி, உடை, இசை எல்லாமே மாற்றமடையும்.

"நமது கல்வி மற்றும் சினிமா என்பவற்றால் நாம் எமது பண்பாட்டு நிலத்தையும் உடலையும் தொலைத்து விட் டோம். இவ்வாறானதொரு சூழலில் நாடக உடலை, நிலத்தை நீங்கள் எவ்வாறு கண்டுகொள்கிறீர்கள்?

"நமது கல்வி, சினிமா எல்லாவற்றிக்கு ஊடாகவும் திறமை யுள்ள (Skill) ஒருவனை உருவாக்குவது பற்றியே பேசப்படுகிறது. இது ஒரு பயன்பாட்டுப் பொருளாகவே மாறுகிறது. 'பண்பாட்டு எண்ணமுள்ள திறன்' உருவாக் கப்படுவதில்லை. இதனால் இந்த உடலைப் பெறுவதற்கு சடங்கைப் பார்க்கிறோம். தற்போதுள்ள எல்லைக்குட் பட்ட, 'மட்டுப்பாடுகள் உள்ள திறன்' என்ற எண்ணத் துக்கு அப்பாற்பட்டு சடங்கைப் பார்க்கவேண்டும்.

## சடங்கில் உடல்

"சடங்கில் வித்தியாசமான உடல் இருக்கிறது. பூர்வ சடங்குகளில் வெவ்வேறு உடல்களைக் காணலாம். தீட்டு, விலக்கப்பட்டது என்ற மட்டுப்பாடுகளைத் தகர்த்து இதனைப் பார்க்கவேண்டும். எல்லாம் தூய்மையானது என்று பார்க்கும்போதுதான் இது சாத்தியமாகும். இவை அனைத்தையும் பார்க்கும்போது எங்களுக்குள் முளைக்க ஆரம்பிக்கும். அது என்ன தானியத்தை தரப்போகிறது என்று விளங்குகிறது. அதைச் செய்து பார்க்கிறோம். சடங்கிலிருந்து அப்படியே எடுப்பதில்லை. மேற்கத்தேய சிந்தனைப்படி இது கிராமிய அரங்கு (Folk theatre) இது கூத்து வடிவம், இது தேவராட்ட வடிவம் என்று வரை யறுக்க விரும்பவில்லை. எங்களுக்குள்ளே முளைப் பதை நாங்கள் செய்து பார்க்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாடகப் பள்ளிகளில் ஒரு நடிகனைத் திறன் உடைய வனாக மாற்றுகிறார்கள். ஆனால் அவனுக்கு பண்பாட்டுத் திறனைக் கொடுக்கத் தவறுகிறார்கள். அதனால் அது பயன்பாட்டுப் பொருளாக மாறிவிடுகிறது. அதனை சினிமா பயன்படுத்துகிறது. எங்களிடம் உள்ளது மட்டுப்படுத்தப் பட்ட உடல்மொழிதான். அது எப்படி அசையும் என்று தெரியும். இதனால் என்ன நடக்கப் போகுது என்று எளிதில் பார்வையாளர்களுக்குத் தெரிந்துவிடும். கலை நிறைந்து வந்த பின்னர் சாத்தியமில்லாதது எல்லாம் சாத்தியமாகும் உடல்மொழி கண்டுபிடிக்கப்படும்."

"மதுரையில் என்னென்ன நாடகங்கள் செய்திருக்கிறீர்கள்?"

'செம்மூதாய்', இது பெண்ணுக்குப் பேய் பிடிப்பது பற்றிப் பேசுகிறது. பொதுவாக பெண்களுக்குத்தான் பேய் பிடிக்கும். ஆண்களுக்குப் பிடிப்பதில்லை. ஒரு பெண்ணுக்கு ஐந்து பேய்கள் ஒரே நேரத்தில் பிடிக்கும். அங்கு ஐந்து வித்தியாசமான உடல்கள் இருக்கும். அதைக் கண்டு கொள்கிறோம். பேய்கள் வனங்களிலும் மரங்களிலும் மிருகங்களுடனும் பறவைகளுடனும் சேர்ந்துதான் இருக்கும். ஆனால் இன்று மரங்கள் தறிக்கப்படுகிறது. அப்போது பேய்கள் எங்கே போகும் என்ற சுற்றுச் சூழல் பிரச்சினைகளையும் கூந்தல் நகரம் பேசியது. தீட்டு, விலக்கு என்ற மட்டுப்பாடுகளைத் தவிர்த்துத்தான் இதை யெல்லாம் பார்க்க வேண்டியிருக்கும். ஏற்கனவே உள்ள பூட்டை உடைக்க வேண்டும்.

'வனத்தாதி' என்றொரு நாடகம். இது வனவாசிகளின் நிலம், நிலச்சட்டம் கொண்டு வந்து பறிக்கப்படுவது பற்றியதாகும். 'வாக்கு'த்தான் வனவாசிகளின் இருப்பிடத்தை நிர்ணயித்தது. பட்டயம் வந்த பிறகு நிலம் பறிபோகிறது. இதில் சடங்கு வலுப்பெறுகிறது.

'உதிர முகமூடி' என்ற நாடகத்தில் பண்பாட்டுச் சின்னங்கள் போரின்போது அழிக்கப்படுவது பற்றிப் பேசப்படுகிறது. யாழ்ப்பாண நூலகத்தை அழிக்கிறார்கள். பாக்தாத்தில் மியூசியத்தை அழிக்கிறார்கள். ஆப்கானிஸ்தானில் புத்தர் சிலையை உடைக்கிறார்கள். வேர்களை அழித்தல் அதன் மூலம் இருப்பை அழித்தல் பற்றி அந்த நாடகம் பேசுகிறது. புத்தர் உதிர முகமூடி அணிந்து வருகிறார்.

'குற்றம் பற்றிய உடல்'. இந்தியாவில் வருடாந்தம் ஒரு லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்கிறார்கள். இதனை வெறும் செய்தியாக்காமல் என்ன செய்யலாம் என்பதான நாடகம். தாவரங்களோடு தாவரங்களாக வாழ்பவர்கள் விவசாயிகள். ஒரு தாவரம் பிறந்து வளருதல், கருகுதல் என்பதான ஒரு காட்சி அமைக்கப்படும். இதனைவிட 'விளாவில் உருவிய தகை', 'பித்த நிலத்தின் பொம்மைகள்', 'கவைத பூமி', 'கூந்தல் நகரம்' போன்ற பல நாடகங்களை மதுரையில் செய்திருக்கிறோம்."

## சிறுவர் நாடகம்

"குழந்தைகளோடு நாடகம் செய்த அனுபவம் என்ன?"

குழந்தைகளோடு சேர்ந்து 26 நாடகங்கள் வரை செய்துள்ளேன். முன்னால் சிறுவர்களுக்கு நாடகம் எழுதிக் கொண்டு செல்லவேண்டும் என்ற எண்ணம் இருந்தது. இப்போது சிறுவர்களே நாடகத்தை உருவாக்குகிறார்கள். குழந்தைகளுக்குரிய வெளி உருவாகிறது. அந்த வெளியைக் கண்டுபிடிப்பது பற்றிப் பேசுகிறது. குழந்தைகளிடம் ஐந்தாம் வகுப்பு வரை ஒரிஜினல் சிந்தனை இருக்கிறது. அதற்குப் பிறகு கற்பிப்பதற்கேற்ப நடக்கத் தொடங்குகிறார்கள்.

'மூன்றாம் வகுப்புக் குழந்தையிடம் எழுத்து எப்படி உருவாகிறது என்று கேட்டபோது, "இதுகூடத் தெரியாதா? ஒரு பேப்பர் இருந்தது. ஒரு பென்சில் இருந்தது. காற்றடிக்க பேப்பர் பென்சில்ல போய் மோதிச்சு. மோத மோத பேப்பரில் கீறப்பட்டது. அதை எடுத்துப் பார்த்தா எழுத்து இருந்தது.' என்று தனது கற்பனையை அந்தக் குழந்தை சொல்லியது. இது எவ்வளவு அற்புதமானது!

"முதலில் படிப்பிக்கிறதை நிறுத்த வேண்டும். அதுவொரு அதிகாரமாக மாறும்போது பிள்ளை அதில் இருந்து தப்பித்து வெளிக்கு ஓடுகிறது. அங்கே தனியே அமர்ந்து பேசிக்கொண்டிருக்கிறது."

'தமிழ்நாட்டின் நாடக உலகில் இளையோரின் பங்களிப்பு எப்படி உள்ளது?"

"ஆரோக்கியமாக உள்ளது. இதில் நான் முக்கியமாக நம்பிக்கையோடு குறிப்பிடுபவர்கள் மூன்று பேர். கருணா பிரசாத் ஆர்வத்தோடு நாடகம் செய்யும் ஒருவர். அடுத்தவர் தனசேகரன். பாண்டிச்சேரியைச் சேர்ந்த ஓவியர். அவரது நாடகங்களில் அதன் செல்வாக்கைப் பார்க்கலாம். மூன்றாமவர் கோபி. தற்போது பாண்டிச்சேரியில் முனைவர் பட்டத்திற்கான ஆய்வில் ஈடுபட்டுள்ளார். இவர்கள் இளமையாகவும் ஆர்வமாகவும் இருக்கிறார்கள்."

## தமிழ்நாட்டின் நாடகப்போக்கு

"தமிழ் நாட்டின் நாடகப் போக்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?"

"எமது பண்பாட்டுக்கான உடல் ஒன்று இருக்கிறது. மேற்கின் உடல் நேர்கோடானது. அதைக் கடந்து எமது நிலத்தில் பயணிக்க வேண்டும். நாடகத்தின் நிலம் மாறவேண்டும். அப்படி மாறினால் நாடகத்தின் உடை இசை மொழி எல்லாம் மாறும். அது ஒரு வடிவத்தை பிரயோகிப்பதாக இருக்கக்கூடாது. உண்மையானதாக இருக்க வேண்டும். உண்மையான நிலத்தில் இருந்து வரவேண்டும்."


"இன்று உங்கள் முன் உள்ள சவால்கள் எவை?"

"நாங்கள் நாடக நிலத்தை தேடுகிறோம். ஆனால் இன்று ஈழத்தில் நிலமில்லை. நிலமிழந்து நெருக்கடிக்குள் இருக்கிறான். இப்போது திசைக் குழப்பம் வருகிறது. நிலம் உடைந்து போயிருக்கிறது. பதுங்கு குழிகளாக, அழிந்த கால்நடைகளாக, அவலங்களாக நிலம் கிடக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்? இந்த நிலமற்ற தன்மைக்கு, உடலற்ற தன்மைக்கு இப்போது என்ன செய்யலாம்? உடல்கள் எல்லாம் உறைந்து போய் நிற்கிறது. இதில் நிலம் எது? இதைக் கலைத்துடிப்போடு சொல்லவேண்டும். அதைச் செய்ய முடியவில்லை. ஊடகங்கள் இதை யெல்லாவற்றையும் செய்தியாக மாற்றுகின்றன. ஆனால் உள்ளே பயணித்து எதையும் செய்ய முடியவில்லை. இது எனக்கு முன்னுள்ள சவால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்காகவே வாழ்ந்த கலைமாமணி மகாதேவன்


எம்.மதியழகன், நூலகர், இணுவில்



காரைவெட்டியில் உள்ள வதிரிக் கிராமத்தில்-அண்ணாமலை சின்னப்பிள்ளை தம்பதிகளுக்கு மகனாக 1930.12.07ல் மகாதேவன் பிறந்தார். இளமையிலேயே கலையில் ஆர்வம் காட்டினார். இவருடைய தந்தையார் இவரை ஆரம்பக் கல்விக்காக தேவரையாளி சைவ வித்தியாசாலையில் (இந்துக் கல்லூரியில்) சேர்த்தார்.

தேவரையாளி சைவ வித்தியாசாலையில் 3ம் வகுப்பில் கல்வி கற்கும்போது, க.முருகேசு ஆசிரியர் தயாரித்த நாடகத்தில் கிரி சாம்பாள் பாத்திரம் ஏற்று நடித்தார். அத்தோடு கலாவினோதன் வெ.அண்ணாசாமி ஆசிரியர் இயக்கிய சம்பூர்ண ராமாயணம் நாடகத்தில்-ராமனாகவும் நடித்துப் பலருடைய பாராட்டையும் பெற்றார். இவர் நாடகத்துறையில் மட்டுமன்றி சங்கீதம், நடனம், ஓவியம் போன்ற கலைகளிலும் தேர்ச்சி பெற்றவர். இவருடைய வழிகாட்டிகளாக, க.முருகேசு மற்றும் கலாவினோதன் போன்றோர் நாடகத்திற்கும், மாத்தளை முத்தமிழ் வித்தகர் பூபதி நடராஜா, இணுவில் பிரம்ம ஸ்ரீ ந.வீரமணி ஐயர் போன்றோர் சங்கீதம் நடனம் என்பவற்றிற்கும் வழிகாட்டிகளாக விளங்கினர்.

நாடகத்தை தயாரித்து மேடையேற்றுவதற்கு வசதியாக 01.01.1958 - 01.01.1960 வரை வதிரி இளைஞர்கள் என்ற பெயரிலும் 01.01. 1961 - 02.10.1985 வரை வதிரி மதீஸ் புறொடக்ஷன் என்ற பெயரிலும் 02.10.1985 - 14.12.2006 வரை ஸ்ரீ லஷ்மீஸ் புறொடக்ஷன்ஸ் என்ற பெயரிலும் அமைப்புக்களை ஆரம்பித்து இயலிசை நாடகங்கள் தயாரித்து மேடையேற்றினார். இவை மூலம் 28 நாடகங்கள் தயாரித்து மேடையேற்றப்பட்டதாக அறிய முடிகிறது.




மகாதேவனின் சிவதாண்டவத் தோற்றம். 30க்கும் மேற்பட்ட மேடைகளில் அவர் ஆடிய சிவதாண்டவம் பலரதும் பாராட்டைப் பெற்றுத் தந்தது.

இவருடைய கலைவாழ்விலே இவரை மிகவும் புகழடையச் செய்தது இவர் தயாரித்து மேடையேற்றிய 'அன்றொரு நாள்' ஓரங்க சமூக நாடகம். இந்நாடகம் 200ற்கும் மேற்பட்ட தடவைகள் மேடையேறி பலரதும் பாராட்டைப் பெற்றுள்ளது. இந்நாடகம் கோண்டாவில் வாகீஸ்வரி நாடக மன்றம், ஆவரங்கால் சர்வோதயம் என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட நாடகப் போட்டியில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றது. இந்நாடகத்தின் மூலம் இவர் மட்டுமன்றி பல நடிகர்களும் புகழடைந்தனர். ரூபவாஹினி தொலைக்காட்சி இந்நாடகத்தை படமாக்கும் முயற்சியில் ஈடுபட்டது. எனினும் நாட்டுச் சூழல் காரணமாக அம்முயற்சி தடைப்பட்டது.

மகாதேவன் தான் மேடையேற்றும் நாடகங்களுக்குத் தானே பக்கவாத்திய இசையையும் இசைப்பார். அத்தோடு தனது நாடகங்களுக்கு உரிய காட்சி அமைப்பையும் தானே வரைவார். பல்துறை சார்ந்த கலைஞனாக அவர் திகழ்ந்தார். தனது வதிரி மதீஸ் புறொடக்ஷன்ஸ், ஸ்ரீ லக்ஷ்மீஸ் புறொடக்ஷன்ஸ் தயாரிப்பு நிறுவனங்களின் ஒவ்வொரு ஆண்டு விழாவின் போதும் கலைஞர்கள் ஒன்று கூடலையும் கலை நிகழ்வுகளையும் நடத்தினார். 2000ம் ஆண்டு வதிரி அபிவிருத்தி நிறுவனத்தால் அவருக்கு 'கலைமாமணி' விருது வழங்கப்பட்டது. 14.12.2008 அன்று அவர் இயற்கை யெய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கலையரசு சொர்ணலிங்கமும் அவரது நாடக வாழ்வும்



நவாலியூர் நடேசர்

பத்திரிகையாளர்,
நாடக எழுத்தாளர்

நவாலியில், ஆனைக்கோட்டை -காரைநகர் வீதியில், சென் பீற்றர்ஸ் தேவாலயத்திற்குச் சற்றுத் தள்ளி தெற்குப் புறமாக ஒரு குச்சு ஒழுங்கை நளைந்து முடக்குகளில் திரும்பி நீண்டு சென்று கடைசியாக ஓர் ஒதுக்குப்புறத்தில் குளிர் நிழல் பரப்பும் மரக்கூட்டங்களின் மத்தியிலுள்ள ஒரு விசாலமான வீட்டின் படலையில் முடியும். அந்த வீட்டிலேதான் கலையரசு நான் அறியக் கூடிய வயதிலிருந்து வாழ்ந்து வந்தார்.

கொழும்பில் பல வருடங்கள் வாழ்ந்து நாடகங்களை நடத்தி தமிழ் நாடக உலகில் புதியதோர் மலர்ச்சியை ஏற்படுத்திப் பெரும் புகழை நாட்டிய நிலையில் உத்தியோகம் காரணமாக யாழ்ப்பாணம் வந்து நவாலி வாசியாகி விட்டார்.

## நாடகத் தயாரிப்பு

நாடகங்களில் நடிக்க ஆரம்பித்த ஏ.இரகுநாதன் எஸ். அருமைநாயகம் மற்றும் நண்பர்களுக்கும் எனக்கும் அவர் முதலில் நாடக மேடையில்தான் அறிமுகமானார். அந்நிலையில் அவரை அணுகி 1958ம் ஆண்டு யாழ் நாடக மன்றத்தை ஆரம்பித்தோம். மன்றத்திற்கு அவர்தான் போஷகர். நாம் நடிக்கத் தெரிவு செய்த நாடகம் தேரோட்டி மகன். கலையரசுவே அதனை இயக்கினார்.

ஏறத்தாழ நான்கு மாதங்கள் வரை ஒத்திகை நடந்தது. ஒத்திகைகளில் தனக்குத் திருப்தி ஏற்படவில்லை என்று சொல்லி அவர் அவ்வளவு காலத்தையும் இழுத்தார். கடைசியாக எமது தொல்லை பொறுக்கமாட்டாது நாடகத்தை மேடையேற்ற உடன்பட்டபோது அவர் இப்படிக் கூறினார். 'அறுபத்தாறு வருடங்களுக்கு மேலாக நான் நாடகங்களில் நடித்து வருகிறேன். ஒரு நாளாவது புறொம்டர் சொல்வதைக் கேட்டு நான் நடித்ததில்லை. வசனத்திற்காக அவரைப் பார்த்துத் திண்டாடிக் கொண்டிருக்கும்போது இயல்பான நடிப்போ முகபாவமோ எப்படி வரும்?'


'தேரோட்டி மகன்' முதலாவதாக 1959ம் ஆண்டில் மாணிப்பாய் இந்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியில் மேடையேற்றப்பட்டு எல்லோரது பாராட்டை யும் பெற்றது. தொடர்ந்து யாழ் நகர மண்டபத்தில் நடத்தப் பட்டது. கொழும்பு, திருகோணமலை முதலிய வேறு இடங்களில் நாடகம் மேடையேற்றப்பட்ட காலங்களில் கலையரசு சகுனியாக நடித்தார். அந்நாடகத்தில் குழந்தை ம.சண்முகலிங்கம் அரிச்சுனனாகவும் எஸ்.ரி.அரசு சாத்தகேசியாகவும் நடித்ததில் எமக்கு அறிமுகமானார் கள்.

பின்பு யாழ் நாடக மன்றம், ஓறியன்ஸ் விளையாட்டு நுண்கலைச் சங்கத்துடன் இணைக்கப்பட்டு, 'வழிதெரிந் தது', 'இன்பநாள்' முதலிய சிறந்த நாடகங்களை மேடை யேற்றி வந்தது. அந்நாடகங்களை கலையரசுவே நெறி யாள்கை செய்தார்.

அக்காலங்களில் எம்மை இரவு பகலாக கலையரசுவின் இல்லத்திலே காணலாம். அவர், தான் முன்பு சந்தித்த பம்மல் சம்பந்த முதலியார், கிட்டப்பா, கே பி சுந்தராம்



பாள் முதலிய பெருங்கலைஞர்கள் பற்றியும் தான் நடித்த நாடகங்கள் பற்றியும் தொடர்ந்து பேசிக் கொண்டே இருப்பார். அவரின் இல்லம் நாங்கள் கலைபயிலும் கலையரங்கமாக அன்று கலகலப்பாக விளங்கியது. (நாற்சார் அமைப்பில் அமைந்த வீடு)

## வியத்தகு ஞாபக சக்தி

அவரின் ஞாபக சக்தி மிகவும் வியக்கத்தக்கது. எத்தகைய குறிப்பையும் எழுதி வைத்திராது திகதி, மாதம், ஆண்டு என்பவற்றையெல்லாம் குறிப்பிட்டு 'ஈழத்தில் நாடகமும் நானும்' என்ற நூலில் எழுதியிருக்கிறார். வாலிபருக் குள்ள குறும்புத் தனத்துடன் நாம் அது பற்றி பரிசோ தனை செய்தும் பார்த்தோம். அவர் சரியாக, எல்லாவற் றையும் அப்படியே சொன்னார்.

அவரது உடம்பெங்கும் நாடக உணர்வே பரவியிருந்தது. அவர் எவருடன் கதைத்தாலும் நாடகம் பற்றி ஒரு சொல் லாவது சொல்லாது விடமாட்டார். அவர் முதுமைய டைந்து வெளியில் செல்ல இயலாத நிலையில் தனிமை யாக ஓர் அறையில் படுத்துக்கிடந்தார். அப்போதெல்லாம் தான் நடித்த நாடகம் ஒவ்வொன்றையும் அந்தக் காலத் தில் மேடைகளில் நடந்தவாறு ஆரம்பம் முதல் முடிவு வரை தனது மனத்திரையில் மீட்டுப் பார்த்து வருவதாக பல சந்தர்ப்பங்களில் என்னிடம் கூறியிருக்கிறார்.

ஒரு நாள் அவரிடம் போனபோது இராத்திரி எங்கள் 'வேதாள உலகம்' நாடகம் பார்த்தேன் தத்தனாகிய என்னுடன் ஏனைய பாத்திரங்களாக வேஷம் போட்ட வர்கள் மேடையில் நின்றார்கள். அவர்கள் பேசும் வசனங் களையடுத்து தத்தன் பேச வேண்டிய வசனத்தை நான் இப்படிக் கிடந்தபடியே என்னையறியாமல் உரத்துப் பேசிவிட்டேன் என்று சொல்லிச் சிரித்தார்.

## கலையரசு குடும்பம்

மானிப்பாயில் செல்வாக்குமிக்க படித்த குடும்பத்தில் பிறந்தவர் கலையரசு. அவரின் தந்தையார் எஸ்.கே. லோட்டன் (கனகரட்ணம்) சங்கீதம், நாடகம் முதலிய கலைகளில் ரசனையுள்ளவர். போட்டோ கலையில் தொழில்நுட்பங்களைத் தானே ஆராய்ச்சி மூலம் கற்று அத்துறையில் பல கலைஞர்களை உருவாக்கிய முன்னோடி. அவரின் இல்லத்தில் சங்கீதக் கலைஞர்களை யும் நாடகக் கலைஞர்களையும் அநேகமாகக்

**கொழும்பு வந்திருந்த பம்மல் சம்பந்த முதலியாரை 1913ம் ஆண்டு ஜூனில் சந்தித்து ஆசி பெற்று அதே ஆண்டு ஜூலையில் இலங்கா சுபோக விலாச சபாவை ஆரம்பித்தார்.**

காணலாம். வாத்தியக் கருவிகளும் அங்கி ருக்கும். பாட்டும் கூத்துமாக அவர் இல்லம் பொலிவு பெறும்.

இத்தகைய சூழ்நிலையில் வளர்ந்தவர் கலையரசு. இந்தியாவிலிருந்து வருகை தந்த கலைஞர்கள் நடித்த நாடகங்களையெல்லாம் தந்தையுடன் சென்று பார்த்த தில் இளமையிலேயே நாடகத்தில் அவருக்கு ஆர்வம் ஆழமாகப் பதிந்தது.

## கொழும்பில் நாடக ஆர்வம்

உத்தியோகத்திற்காகக் கொழும்பிற்குச் சென்ற பின்பும் இந்திய நாடகக் கம்பெனிகளின் நாடகங்களைப் பார்த்த தில் அவரது நாடக ஆர்வம் விருட்சமாக வளர்ந்து கிளை பரப்பியது. நாடகத்தின் பொருட்டு கொழும்பிற்கு வந்தி ருந்த பம்மல் சம்பந்த முதலியாரை 1913ம் ஆண்டு ஜூன் மாதம் 18ம் திகதி சந்தித்து ஆசி பெற்று அதே ஆண்டு ஜூலை மாதம் 7ம் திகதி இலங்கா சுபோக விலாச சபாவை ஆரம்பித்தார். அச்சபாவின் அதிகாரி ஏ.செல்ல முத்து, சேர்.இரத்தினசோதி, சரவணமுத்து போன்ற தமிழ்ப் பெரியார்களும் கனவான்களும் முதன்மைப் பதவிகளை வகித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்காலத்தில் நாடகம் நடிப்பது இழிவு என்று சமூகத்தில் கருதப்பட்டு வந்தது. எனவே தகப்பனிடம் கலையரசு நடிப்பதற்கு அனுமதி கேட்டுக் கடிதம் எழுதினார். அதற்கு

> தொழில் முறையிலே நாடகங்களை அக்காலத்தில் நடாத்தி வந்தவர்களது வாழ்க்கை வறு மையில் துவண்டவையாகவும் ஒழுக்கம் சிதைந்ததாகவும் இருந்தன. இக்காரணங்களாலே தான் நாடகம் நடிப்பது இழிவானதாகக் கருதப்பட்டது.

அவர் ஓய்வு நேரங்களை அத்தகைய கலைகளில் ஈடுபடுத்துவது நல்லது. ஆனால் நடிகனாகவோ அல்லது மற்றவர்களை நடிக்க வைத்தோ நாடகத்தின் மூலம் ஒரு சதமாவது சம்பாதிக்கக்கூடாது என்று தனக்கு உறுதியளிக்கும்படி கடிதம் எழுதினார்.

இவ்வண்ணம் எழுதியதிலிருந்து அவர் நாடகக் கலை மீது வைத்திருந்த அபிமானத்தை உணர்ந்து கொள்வதோடு குறிப்பாக இன்னொரு விடயத்தையும் அறிந்து கொள்ளலாம்.

பெரும்பாலும் தொழில் முறையிலே நாடகங்களை அக்காலத்தில் நடாத்தி வந்தவர்களது வாழ்க்கை வறுமையில் துவண்டவையாகவும் ஒழுக்கங்கள் சிதைந்தவையாகவும் இருந்தன. இக்காரணங்களாலேதான் நாடகம் நடிப்பது இழிவாகக் கருதப்பட்டது.

இப்படியான நிலையில் தனது மகன் நாடகத்தின் மூலம் காசு உழைக்கத் தொடங்கினால் அவரும் தொழில்முறை நடிகனாக சிலவேளை மாறிவிடக்கூடும். தொழில்முறை நடிகர்களோடு சேர்ந்து இவரும் தனது வாழ்க்கையைச் சீர்கெடுத்து விடலாம். அது தமது குடும்பத்திற்கு அவமானமாகிவிடும் என்று அவர் நினைத்திருக்கலாம்.

## நாடகப் பயணம்

நாடகத்தில் நடிக்கப் போவதையறிந்ததும் கொழும்பிலுள்ள தனது சொந்தக்காரர், 'தகப்பனுக்கும் தாய்க்கும் அவமானம் தேடப் புறப்பட்டு விட்டான்' என்று முறுமுறுத்தனர் என கலையரசு எழுதிக் கூறியிருக்கிறார். அதை ஈழத்தில் நாடகமும் நானும் என்ற நூலிலும் குறிப்பிட்டிருக்கிறார். தகப்பன் கடிதத்தில் குறிப்பிட்ட விடயத்தை அவர் ஏற்றுக்கொண்டு, சம்பந்த முதலியாரின் சிம்ஹளநாதன் நாடகத்தை நடிப்பதற்காகத் தேர்ந்தெடுத்தார். தாமே அந்த நாடகத்தை நெறியாள்கை செய்தார். 1933ம் ஆண்டு டிசம்பர் மாதம் பதினெட்டாம் திகதி மேடையேற்றப்பட்டு ரசிகர்களை மெய்மறக்கச் செய்த, வியப்பிலாழ்த்திய அந்த நாடகமே ஈழத்தின் தமிழ் நாடகத்துறையின் புதிய அத்தியாயத்தை எழுதியது. ஒப்பனை, காட்சியமைப்பு, நடிப்பு, ஒழுங்கு எல்லாவற்றிலும் புதுமையோடு மக்களைக் கவர்ந்ததாக பத்திரிகைகள் விமர்சித்தன.

## பெரும் நடிகர் சரவணமுத்து

அந்த நாடகத்திலேதான் பெருங்கலைஞராகப் பின்பு புகழப்பட்ட கே.சரவணமுத்துவை முதல் முறையாக கலையரசு நடிக்க வைத்தார். பெண் பாத்திரத்திற்குப் பொருத்தமானவரைத் தேடித் திரிந்த அவர், சரவணமுத்துவின் அழகிய தோற்றம் பொருந்தலைக் கண்டு நடிக்க வரும்படி கேட்டார். சரவணமுத்துவின் தந்தையார் பெண் பாத்திரத்தில் நடிப்பதற்கு அனுமதிக்கவில்லை. எனவே அரசகுமாரன் பாத்திரம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. காலப்போக்கில் பெண் பாத்திரங்களில் நடிப்பதற்கு கலையரசு அவரை இணங்கச் செய்துவிட்டார். பெண் பாத்திரங்களில் அவர் மிக அற்புதமாக நடித்து புகழ் சேர்த்தார் என கலையரசு எம்மிடம் சொல்லியிருக்கிறார்.

☞ 31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடக எழுத்துருப் பயிற்சி நெறி

நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பயிற்சி அல்லது அனுபவத்தைப் பெறுவதற்கு மாண வர்களிற்கு களம் கிடைக்கவில்லை என்ற ஒரு கருத்து நிலவுகிறது. இதனைக் கருத்தில் கொண்டும் செய்முறைப் பயிற்சியை விரும்பும் ஆசிரியர்கள்,ஆர்வலர்களின் தேவை கருதியும் நாடக எழுத்துருத் தயாரிப்புக் கற்கை நெறியை செயல்திறன் அரங்க இயக்கம் ஆரம்பித்துள்ளது.



குழந்தை சண்முகலிங்கம்

முதல் பிரிவு கடந்த மாசி மாதம் ஆரம்பித்தது. இந்த மூன்று மாத காலப் பயிற்சி வைகாசி 17ம் திகதி நிறைவடைந்தது.

நாடக எழுத்துரு உருவாக்கம், நெறியாள்கை, காட்சியமைப்பு, விமர்சனம் போன்ற விடயப் பரப்புக்களை உள்ளடக்கி பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சியில் பங்குபற்றிய இருபது பேரில் பதினாறு பேர் பயிற்சி நெறியினை சிறப்பாகப் பூர்த்தி செய்தனர்.

வளாளராக குழந்தை ம.சண்முகலிங்கம் கலந்து கொண்டு பயற்சிகளை வழங்கினார். பயிற்சியில் குறிப்பிட்ட நேரத்தை வரையறுத்து குறிப்பிட்ட தலைப்பில் எழுத்துரு உருவாக்குவது பலரதும் ஆர்வத்திற்குரியதாக அமைந்திருந்தது.

மாணவர்களின் அனுபவத்திற்காக 'யாரொடு நோகேன்', 'பஞ்சவர்ண நரியார்' ஆகிய நாடகங்கள் பழக்கப் பட்டன. கற்றல், கற்பித்தலில் தாம் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் குறித்து மாணவர்கள் வளவாளருடன் கலந்துரையாடினர்.





தே.தேவானந்த்
நிறைவேற்று இயக்குநர்
செயல்திறன் அரங்க இயக்கம்
யாழ்ப்பாணம்

தமிழில் நல்ல நாடகங்கள் வரவேண்டும் என்ற காத்திரமான விவாதங்கள் நடந்துகொண்டிருந்த காலகட்டத்தில் பத்திரிகையாளரும் நாடகக்காரருமான அமரர் கோமல் சுவாமிநாதனால் எழுதப்பட்ட, மிகப் புகழ்பெற்றதான நாடகம் 'தண்ணீர் தண்ணீர்'. 1980ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட இந்நாடகம் அக்காலத்தில் 180 தடவைகள் மேடையேற்றப்பட்டிருக்கிறது. இந்த நாடகத்தை அண்மையில் சென்னையில் பார்க்கக் கிடைத்தது. நுங்கம்பாக்கம் கலாசார அக்கடமி ஏற்பாடு செய்திருந்த நுண்கலை விழாவில் நாடகம் போடப்பட்டது.

'தண்ணீர் தண்ணீர்' நாடகத்தை கோமல் சுவாமிநாதனின் நெறிப்படுத்தல் முறைமையில். வாத்தியார் ராமன் மீண்டும் நெறிப்படுத்தியிருந்தார். எண்பதுகளில் நடித்த பலர் இப்போதும் வயது முதிர்ந்தோராக இதில் பங்குபற்றுகிறார்கள். அவர்களின் நடிப்பில் நல்ல முதிர்ச்சியைக் காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்திப்பட்டி கிராமத்தை கண்முன்னே விரியவைத்த நாடகம் நம்மை அதன் பார்வையாளர்களுக்குள் மூழ்க வைத்தது. பண்ணையாரைக் கொலை செய்துவிட்டு அத்திப்பட்டிக்கு வரும் வெள்ளச்சாமி (நடு பாத்திரம்) கிராமத்து மனிதர்களுடன் உரையாடும் உணர்ச்சிபூர்வமான காட்சி.

# காலங்கள் கடந்து வாழும் தண்ணீர் தண்ணீர் நாடகம்

சிறுகதை போன்று ஒரு சீரான இயங்கு நிலையை யுடைய கதையொன்றை 'தண்ணீர் தண்ணீர்' நாடகம் கொண்டுள்ளது. தண்ணீர் இல்லாத ஒரு கிராமத்தின் துன்பத்தை எளிய முறையில் இக்கதை அவலச்சுவை யாக உணர்த்தி நிற்கிறது. மேடையில் தோன்றாக் காட்சிகளை எடுத்துரைப்பு முறையின் ஊடாக வெளிப் படுத்துவது இந்நாடகத்தின் சிறப்பம்சமாகும்.

## கதை

அத்திப்பட்டியென்றொரு கிராமத்திற்கு வெள்ளச்சாமி என்ற நடுத்தர வயது மதிக்கத்தக்க ஒருவன் வருகிறான். சாப்பிட்டு விட்டு குடிப்பதற்குத் தண்ணீர் கேட்கிறான் அவ்வூர்காரர் களிடம். அப்போதுதான் அக்கிராமத்தில் தண்ணீர் இல்லாததும் அவர்கள் மிக நீண்ட தூரம் நடந்துசென்று தண்ணீர் சேகரித்து வருவது பற்றியும் அறிந்து கொள்கிறான். இதனால் ஊரின் தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு அங்கேயே தங்கியிருந்து உதவுவதாகக் கூறுகிறான். தண்ணீர் வண்டியொன்று ஏற்பாடு செய்து ஏழு மைல் தூரத்தில் உள்ள தண்ணீர் ஊற்றில் (தேனூற்றிலிருந்து) தினமும் தண்ணீர் இறைத்து வந்து கொடுக்கிறான்.

இவ்வேளையில் கொடுமைக்காரப் பண்ணைக்காரர் ஒருவரைக் கொலை செய்துவிட்டு பொலீஸில் இருந்து தப்பிப்பதற்காக வெள்ளச்சாமி அத்திப்பட்டியில் மறைந்திருக்கிற விடயம் ஊர் மக்களுக்குத் தெரிய வருகிறது. வெள்ளச்சாமி மீதுள்ள மதிப்பு மரியாதை காரணமாக ஊரார் வெள்ளச்சாமியை பொலீஸில் காட்டிக் கொடுக் காது பாதுகாக்கிறார்கள்.

அந்தச் சமயத்தில் தேர்தல் வருகிறது. தமக்குத் தண் ணீர் பெற்றுத் தராததால் அதுவரை வாக்குப் போட்டு வந்த நாயக்கருக்கு வாக்குப் போடாமல் தேர்தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரார் புறக் கணிக்கிறார்கள். இதனால் நாயக்கர் தோற்றுப் போகிறார். கோமடையும் அவர், ஊராரின் தண்ணீர் வண்டியை உடைத்து விடுகிறார். வெள்ளச் சாமி மூலம் கிடைக்கப் பெற்ற தண்ணீர் நின்று விடுகி றது. ஊரார் எல்லோரும் சேர்ந்து அத்திப்பட்டிக்கு வாய்க் கால் வெட்டி ஏழு மைல் தூரத்தில் ஓடுகின்ற நீரூற்றை கிராமத்திற்குத் திருப்பிவிட முயற்சிக்கிறார்கள். கால்வாய் வெட்டி முடிக்கப்படுகிறது.

அடுத்த நாள் தண்ணீர் வந்து விடும் என்ற நிலையில் அரச அதிகாரிகள் அந்த வாய்க்காலை மூடி விடுகிறார் கள். அனுமதியின்றி அரச காணியில் அந்த வாய்க்கால் வெட்டப்பட்டுள்ளது என்று நாயக்கர் கொடுத்த புகாரின் பேரில் அதிகாரிகள் இந்த நடவடிக்கையை எடுத்தனர். அத்திப்பட்டிக்கு தண்ணீர் கிடைக்காமல் போய்விடு கிறது. அதுமட்டுமல்லாது வெள்ளச்சாமியைப் பொலீஸ் துரத்துகிறது. வெள்ளச்சாமி ஓடிக் களைத்து விழுந்து மூச்சடங்கி விடுகிறான். தண்ணீர் இல்லாததால் ஊரில் இருந்தவர்களில் பலர் ஊரைக் காலி செய்து சென்றுவிடு கிறார்கள். ஊர் அனாதரவாகக் கிடக்கிறது என்பதாகக் கதை முடிகிறது.




## பாத்திரங்களின் ஊடாட்டம்

இடதுசாரியச் சிந்தனையை அல்லது முற்போக்குச் சிந் தனைகள் பலவற்றை முன்வைத்து வாதப்பிரதிவாதங் கள் ஊடாக வார்த்தைகளில் பெரிதும் தங்கியதாக நாடக ஆற்றுகை நகர்ந்து செல்கிறது. வெள்ளச்சாமி பாத்திரத் திற்கு வலுச்சேர்ப்பதற்காக வாத்தியார் (வைத்திலிங் கம்), ஊர்க் கோயில் பூசாரி, அயல் வீட்டார், கட்சித் தொண்டர், பத்திரிகையாளர், முற்போக்குச் சிந்தனையு டைய பெண் பாத்திரம் என்று பல பாத்திரங்கள் மேடை யில் ஊடாடுகின்றன.

வெள்ளச்சாமி, கிராமவாசி, அடைக்கப்பன், குருசாமி, கந்தையன், கோவாலு, செவ்வந்தி, வைத்திலிங்கம், பூசாரி, குப்பனாசாரி, நாயக்கர், ஓவி, பாராங்குசம், அழ கிரி, பெரியவர், இன்ஜினியர் ஆகிய 16 பாத்திங்கள் மேடை வெளியில் யதார்த்தமாக ஊடாடின. 29 காட்சிகளாக நாடகம் பிரிக்கப்பட்டுள்ளது. காட்சி மாற்றங்களுக்கு வசதியாக ஒளி இருட்டாகிப் பின் பிரகாசமாகிறது.

மேடைவெளி பிரதானமாக - காட்சிப் பெறுமானமாக - அத்திப்பட்டிக் கிராமத்தையே கொண்டுள்ளது எனலாம். மூன்று வீடுகள். மேடையின் மத்திய மத்தியில் (CC) செவ்வந்தி, கந்தையன் வீடு அமைக்கப்பட்டுள்ளது. மத்திய இடதில் (CL) வாத்தியார் வைத்திலிங்கம் வீடு அமைந்துள்ளது. அடைக்கப்பன், குருசாமி வீடு மத்திய வலதில் (CR) வைக்கப்பட்டிருந்தது. இதனைவிட முன் மத்தியில் (FC) ஒரு பாறாங்கல் இருக்கை முக்கியம் பெற்றது. நாடகத்தின் பிரதான பாத்திரங்கள் என்பதைக் உணர்த்துவது போன்று வெள்ளச்சாமி, வாத்தியார், வைத்திலிங்கம் போன்றோர் அதில் அவ்வப்போது இருத்தப்பட்டனர்.

## நெருடலாகும் இசை


நாடகத்தின் முதற்காட்சி மரங்கள் நிறைந்த காட்சித்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரையுடன் ஆரம்பிக்கிறது. பின்னர் காட்சித் திரை நீக்கப்பட்டு பிரதான காட்சிக் களத்தில் கதை நகர்கிறது. நாடகத்தின் காட்சி மாற்றத்திற்கும் அசைவியக்க அழுத்தங்களுக்கும் உணர்வெழுச்சித் தூண்டல் மற்றும் அனுசரணைக்கும் ஒலிப்பதிவு செய்யப்பட்ட இசை பயன்படுத்தப்பட்டது. இது கோபால் சுவாமிநாதனின் நெறிப்படுத்தலின் போது உருவாக்கப்பட்ட இசை. மிக நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்ட ஒலிப்பேழை பயன்பாட்டால் ஒலித் தெளிவின்மை பெரிய பிரச்சினையாக இருந்தது. நெருடலாகவும் இருந்தது.



அதிகாரத்தை எதிர்த்து நிற்க முடியாத கிராமத்து மக்கள் வெள்ளைச்சாமியை பொலிஸிடம் ஒப்படைப்பதற்குத் தயாராகிறார்கள்.

மேடைக் காட்சியோடு பிணைந்ததாக யதார்த்தத்தை உணர்த்தி நின்ற முக்கிய கூறாக வேட உடைகளைக் குறிப்பிடலாம். புழுதி படிந்த, தண்ணீர் இல்லாத, வரட்சியான கிராமத்தின் மக்கள் மேடையில் காட்சிப் பெறுமானமாக நிறுத்தப்பட்டார்கள். அழுக்கான சாயம்படிந்த வேஷ்டிகளை உடுத்தி வெற்று மேனியாகவே அதிகமான பாத்திரங்கள் மேடையில் நின்றன. வாத்தியார் முழுக்கை ஷேட் அணிந்திருந்தார். செவ்வந்தி பருத்தி நூல் சேலையுடன் காணப்பட்டார். முரண் நிலையாக நிறுத்தப்பட்ட நாயக்கர், பொலிஸ்காரர், பத்திரிகையாளர், அதிகாரி போன்றோர் இந்த எளிய வறிய உடையுடுத்தியோர் மத்தியில் பகட்டார வாரங்களோடு நிறுத்தப்பட்டிருந்தனர். இதுவே நாடகத்தின் முரணாகவும் பரிணமித்து நின்றது.

> “ இன்றுவரை தண்ணீர் தண்ணீர் மேடையில் உயிர் வாழ்வது என்பது இமாலய சாதனையன்றி வேறென்ன? ”

## தேர்ந்த நடிப்பு

மேடையில் நடிகர்கள் கனகச்சிதமாக சீராகவும் கட்டிறுக்கமாகவும் இயங்கினார்கள். நேரக் கட்டுப்பாடு அசைவுகளிலும் காட்சி மாற்றங்களிலும் காணப்பட்டது. நீண்டகாலம் மேடையேறிய தேர்ச்சியும் அனுபவ முதிர்ச்சியும் நாடகத்தில் காணப்பட்டது. இதனால் சலிப்பின்றி நாடகம் நகர்ந்தது.

வயது முதிர்ந்த பலர் இயல்பாக கிராம மொழி பேசினார்கள். எள்ளலுக்கும் கேலிக்கும் அந்த மொழி மிகவும் அற்புதமாக இருந்தது. வாத்தியார் எள்ளலாக வைத்த பல நியாயங்கள் பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றன. இந்தியாவில் ஐந்தாண்டுத் திட்டங்கள் பல கோடிக்கணக்கில் திட்டமிடப்பட்டாலும் அத்திப்பட்டி போன்ற கிராமங்களுக்கு அத்திட்டங்கள் போய்ச் சேரவில்லை என்பதையும் ஊடறுப்பாக அரசியல் பயனற்று வெறும் வாக்குக் கேட்கும் வெற்றுப் பேச்சு என்பதையும் நாடகம் மிக அழுத்தமாகப் பதிவு செய்கிறது.

## அரசியல்

மதநம்பிக்கை என்ற பெயரில் வளர்க்கப்படுகின்ற மூட நம்பிக்கைகள் பூசாரி பாத்திரம் ஊடாக வெளிப்படுத்தப்பட்டு எள்ளலிக்கப்படுகிறது. பத்திரிகைகள் அபிவிருத்தித் திட்டங்களில் அக்கறை செலுத்துவது இல்லையென்பதும் சினிமா நடிகைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து மக்களை ஏமாற்றுகின்றன என்பதும் வறுமை தண்ணீர் இல்லாப் பிரச்சினைகள் குறித்து எழுதுவதற்கு பத்திரிகை நிறுவனங்கள் தயாராக இல்லை என்பதும் ஒளி என்ற பத்திரிகையாளர் ஊடாக வெளிப்படுத்தப்படுகிறது.

சாதிய நம்பிக்கைகள், அதிகார வர்க்கத்தின் அதிகார வெறி என்பவற்றை மக்கள் வெட்டிய கால்வாயை மூடியதில் காட்டிய அக்கறையூடாகத் துலக்கமாக வெளிக்காட்டியது நாடகம். மக்கள் நலனில் அக்கறையில்லாத யதார்த்த விரோதிகளான அரச அதிகாரிகளையும் தோலுரிக்கின்றது.

## சாதனை

தமிழ் நாடகமானாலும் சரி சினிமாவானாலும் சரி மகிழ்வாக முடியவேண்டும் என்ற நியதி இருந்த, இருக்கின்ற காலத்தில் அவலச்சுவையாக நாடகத்தை முடித்திருக்கின்ற கோமல் சுவாமிநாதனின் துணிவு பாராட்டுதலுக்குரியது. அதுவும் எண்பதுகளில் இந்த முயற்சி புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சியாகவே அமைந்திருக்கும் என் பதில் சந்தேகமில்லை. இந்தப் புதிய முயற்சி வெற்றிபெற்று இன்றுவரை 'தண்ணீர் தண்ணீர்' மேடையில் உயிர் வாழ்வது என்பது இமாலய சாதனை அன்றி வேறென்ன? இன்றைய காலப் பகுதிக் கும் அக்கதை பொருந்திப் போவது மிகப் பெரும் யதார்த்தம்


சீரான கதையிக்கம் அனைவருக்கும் புரியக்கூடிய மொழி நடை காட்சியமைப்பு புரட்சிகரமான சிந்தனை போன்ற பல விடயங்களை உள்ளடக்கிய அவலச் சுவை நாடகம் 'தண்ணீர் தண்ணீர்' அதன் அவலச்சுவை முடிவுதான் பார்வை யாளர்கள் மனதில் மேலும் நாடகம் வாழ் வதற்கான ஏது நிலையை வழங்குகின் றது.

செவிவழிப் பெறுமானமூடாகவும் மேடை யில் நாடகம் வாழும். வார்த்தைகளூடா கவும் காட்சிப் படிமங்கள் வலுவாகப் பிறக்கும். யதார்த்தம் சார்ந்த எளிய காட் சிகள் ஊடாகவும் புரட்சிகரமான கருத் துக்களை தாக்கவன்மையுடன் வழங்க முடியும் என்பவற்றுக்கு 'தண்ணீர் தண் ணீர்' நாடகம் ஒரு வரலாற்றுச் சான்று.

23 ☞ சில வருடங்களுக்கு முன் இங்கு, நாடகம் பற்றிய வரலாற்றினை மற்றவர்களைப் பேட்டி கண்டு எழுதிய ஓர் அன்பர் சரவணமுத்து இல்லாவிட்டால் கலையரசுவே இல்லை என்று குறிப் பிட்டிருந்தமை வருத்தத்திற்குரியது. கலையரசுவிற்கு சரவணமுத்து நாடகம் பயிற்றுவித்தார் என்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. இலங்கா சுபேத விலாசசபாவின் எல்லா நாடகங்களையும் கலையர சுவே நெறியாள்கை செய்தார். சரவணமுத்து பிற்காலத்தில் பலருக்கு நடனம், நாடகம் பயிற்றுவித்து கலைச் சேவை செய்தார். இசை நாடகக் கலைஞர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த பெருங் கலைஞர் என்பது வரலாற்றில் பதிந்த வேறு விடயம்.

## ஒழுக்கம் முக்கியம்

கலையரசுவின் புகழுக்கும் மதிப்பிற்கும் பாராட்டுக்களுக்கும் அவரது நடிப்புத் திறமை மட்டும் காரணமல்ல. நாடகக் கலைஞன் என்ற வகை யில் ஒழுங்கு ஒழுக்கம் என்பவைகளை மிகவும் கண்டிப்பாகக் கடைப் பிடிப்பவராக அவர் இருந்தார். அவர் உத்தியோகத்தர் என்ற அடிப்படை யில் உயர் அதிகாரிகளும் படித்த நண்பர்களும் அவருக்கு ஆதரவு கொடுத்து வந்தார்கள். அவரது குடும்பத்து உறவினர்கள் சொந்தக் காரர்கள் எல்லோரும் செல்வாக்குள்ளவர்களாகவும் உயர் பதவி வகிப் பவர்களாகவும் விளங்கினார்கள். இத்தகைய பின்னணி அவரின் நாடக முயற்சிக்கும் வளர்ச்சிக்கும் பெரியோர்களின் உதவிகளுக்கும் தொடர்புகளுக்கும் வசதியாக அமைந்தது. எனவே அவரது ஆர்வம் மிக்க அயராத முயற்சி நாடகத்திற்கு வகுத்துக் கொண்ட கொள்கை என்பன வெற்றிப் பாதையில் அவரை நடை போடச் செய்தன.




## வாழ்வும் ஒரு கலை

என்னதான் திறமை இருப்பினும் புகழ் சேர்ந்தாலும் ஒரு கலைஞன் எவ்வாறு சமூகத்தோடு பழக வேண்டும் என் பதையும் தனது நாடக வாழ்க்கை மூலம் அவர் தெளிவு படுத்தியுள்ளார். ஒருவனிடம் கலை இருக்கலாம். மற்ற வர்களோடு பேசுவது பழகுவது என்பனவும் இனிய கலையாக இருக்க வேண்டும். அக்கலை கலையரசுவி டம் இருந்தது. நாடகமே உயிர் மூச்சு என்ற நிலையிலே அவர் வாழ்ந்தாலும் குடும்பக் கடமைகளை மறந்தவராக வும், உத்தியோகத்தில் ஒழுங்கில்லாதவராகவும் நடந்து இதெல்லாம் நாடகத்திற்காகவே என்பதுபோல் வழி தடு மாறி விரக்திப் பாதையில் அவர் விழவில்லை.

இல்லத்தின் கடமைகளை உணர்ந்த நல்ல கணவனாக, நல்ல தந்தையாக, சமூகத்தின் நல்ல நண்பனாக அவர் வாழ்ந்தார். பிள்ளைகள் கல்வி, கலை பயில வழி சமைத்து கண்ணும் கருத்துமாகக் கண்காணித்து அவர்களை நல்வாழ்வில் அமர்த்தினார்.

## குருபக்தி


தனது குரு பம்மல் சம்பந்த முதலியாரிடம் அவர் வைத் திருந்த குருபக்தி அபாரமானது. நாடகங்களில் உச்சமான புகழைப் பெற்றிருக்கும் காலத்தில் தமிழ் நாட்டிற்குச் சென்று அவரைச் சந்தித்து ஆசி பெற்றிருக்கிறார். தனது குரு பற்றி எப்போதும் மிகவும் அருமைப்பாட்டோடு பேசு வார். வாய் தடுமாறிக்கூட அவர் பற்றி குறை ஒரு போதும் சொன்னதில்லை. இச்சிறப்பு நலன்கள் எல்லாம் சேர்ந்தே பல பட்டங்களோடு கலையரசுவாகவும் ஈழத்து நாடகத் தந்தையாகவும் அவரை உயர்த்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவுகள்






1978இல் க.சொக்கன் எழுதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அரங்கேற்றப்பட்ட 'தெய்வப் பார்வை' நாடகத்தின் காட்சிகள் இவை. க.உ.ருத்திரேஸ்வரன் (இடது), ஹேமலதா நாகராஜ ஐயர் (இடது). ரி.எஸ்.லோகநாதன், பி.விசயரத்தினம், வி.எம்.குகராசா, ரி.பஞ்சலிங்கம் ஆகியோர் இந்நாடகத்தில் நடித்தனர். யாழ். சேக்கிழார் மன்றம் தயாரித்த இந்த நாடகத்தை நெறியாள்கை செய்திருந்தார் எஸ்.ரி. அரசு. ஒப்பனையையும் அவரே மேற்கொண்டார்.

(ஆவணம் தந்துதவியவர் :
க.உ.ருத்திரேஸ்வரன்)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.

கூத்தரங்கம்
KOOTHHARANGAM

# ஆற்றுகைக் கலையாக நாடகத்தை நிலைநிறுத்துவோம்

அரங்க இதழான கூத்தரங்கம் தனது ஐந்தாவது ஆண்டை பூர்த்தி செய்துகொள்கிறது. 2003ம் ஆண்டு சமா தானத்திற்காக காத்திருந்த ஒரு காலகட்டத்தில் இந்த இதழை நாம் ஆரம்பித்தோம். சுனாமிப் பேரவலம், புரிந் துணர்வு ஒப்பந்த முறிவு, தீவிரமான போர், பல்லாயிரம் மக்கள் சாவு என்ற பெருந்துயர் மிக்க சூழல்களுக்கு இடையில் பல்வேறு கஷ்டங்கள் விமர்சனங்களுக்கு இடையிலும் தனது பணியினைத் தொடர்கிறது.

இந்த ஐந்து ஆண்டுகளில் முப்பது இதழ்கள் வெளிவந்திருக்கின்றன. நாட்டின் சூழ்நிலை காரணமாக சில இதழ்களை உரிய காலத்தில் வெளிக்கொணர முடியவில்லை, யாழ்ப்பாணத்திற்கு வெளியில் உள்ள வாசகர் களை சென்றடைய முடியவில்லை போன்ற பிரச்சினைகளோடு முன்னோக்கி நகர்ந்திருக்கிறோம். பொருளா தார நெருக்கடிக்கு மத்தியிலும் விலை அதிகரிப்பின்றி கூத்தரங்கம் வாசகர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

வாசகர்களைச் சென்றடைவதற்கு வசதியாக கூத்தரங்கம் வலைப்பூ வடிவிலும் (2007) மின் பதிப்பு வடிவத் திலும் (2008) ஆரம்பிக்கப்பட்டன. முடிந்தவரையில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத் திக்கொண்டு அதிகளவான வாசகர்களைச் சென்றடைவதற்கான முயற்சிகள் அனைத்தையும் கூத்தரங்கம் மேற்கொண்டுள் ளது. யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட கூத்தரங்கம் தனது இயங்கு தளத்தை இன்று, சென்னை வரை விரிவாக்கி தமிழ் நாட்டின் அரங்கு சார்ந்த விடயங்களையும் பட்டறிவையும் பகிர்ந்து கொள் கிறது. கூத்தரங்கத்தின் வடிவம் மற்றும் உள்ளடக்கம் அதன் இயங்கு நிலையில் மாற்றத்திற்கு உட்பட்டு வந்துள் ளதை வாசகர்கள் அறிவார்கள். 2005ம் ஆண்டுக்குப் பின் கூத்தரங்கத்தில் செய்திகள் அதிகளவில் இருக்கவில்லை என்ற வாசகர்களின் கருத்தும் இங்கு ஏற்புடையதொன்றாகும்.

அண்மைக் காலங்களில் கூத்தரங்கம் நாடக எழுத்துருக்கள், விமர்சனங்கள் மற்றும் கட்டுரைகளுக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கிறது. அத்தோடு ஆரோக்கியமான கருத்துப் பகிர்வுகள், விவா தங்களுக்கான களத்தையும் மெல்லத் திறந்திருக்கிறது. இருப்பினும் கூத்தரங்கம் பல்வேறு சவால்களையும் எதிர்நோக்குகிறது என்பதையும் மறுப்பத்திற்கில்லை.

கூத்தரங்கத்தை கலைத்துறை சார்ந்த குறிப்பாக நாடகம் சார்ந்த தனித்த இதழாக மட்டும் நிலைநிறுத்தி, தொலைத்து விடாமல் பார்த்துக்கொள்வதில் உள்ள சிரமம்,

மாணவர்கள் தவிர்ந்த வாசகர் வட்டத்தை மேலும் விரிவாக்கிக் கொள்வது அதற்கேற்ற தாக வடிவ மற்றும் உள்ளடக்கத்தில் நிகழ்த்த வேண்டிய மாற்றங்கள்,

கூத்தரங்கத்தை காத்திரமான இதழாக இனங்காட்டுவது, அதேவேளை அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்றதான ஜனரஞ்சக இதழாக வெளியிடுவது மற்றும் இந்த இரண்டுக் கும் இடையில் சமநிலையைப் பேணுவதில் உள்ள சிரமம்,

வியாபார ரீதியாக இதழை வெற்றிபெறச் செய்து நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கச் செய்வதில் உள்ள தடைகள்,

கூறியது கூறல் மற்றும் ரியூசன் ஆசிரியருக்குப் போட்டியாக வெறுமனே கற்பித்தல் பாடவிதானத்தை ஒப்புவித்தல் என்று இல்லாமல் மீளப்படைப்பதில் உள்ள சங்கடம்,

போன்ற சவால்களுக்கு மத்தியிலும் இந்த ஐந்து ஆண்டு அனுபவம் மேலும் பல ஆண்டுகள் கூத்தரங்கம் வெளிவருவதற்கான உறுதியான அடித்தளத்தை இட்டிருக்கிறது. இனிவரும் காலத்தில் உலகெங்கும் உள்ள தமிழ் அரங்க வாசகர்களிடம் கூத்தரங்கம் செல்வதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் அதிகரிக்கப்படும். உலகத் தமிழ் அரங்கில் தொடர்ந்து காணப்படும் அரங்க இதழுக்கான வெற்றிடத்தைத் தீர்க்க முயற்சி செய்யப்படுவ தோடு ஒரு இணைப்புப் பாலமாகவும் செயல்படுவதற்கு முயற்சிக்கப்படும்.

நாடகத்துறையில் ஆரோக்கியமான வளர்ச்சிக்கான விவாதங்களையும் கருத்துப் பரிமாற்றங்களையும் மேலும் அதிகப்படுத்தும். இதில் அனைத்துத் தரப்பினரும் காய்தல் உவத்தலின்றி பங்குகொண்டு ஆரோக்கிய மான பெறுபேறுகளுக்காகப் பாடுபட ஊக்குவிக்கும். மேலும் நாடகக் கலையை ஆற்றுகைக் கலையாக (Peforming art) நிலைநிறுத்துவதற்கும் நாடகத்துறையில் நெறியாள்கை, நடிப்பு, நாடக எழுத்துருப் படைப் பாக்கம் போன்ற துறைகளை உள்ளடக்கிய அரச அங்கீகாரமான உயர் கல்வி நிலையில் செய்முறைப் பயிற்சி நெறி (Practical) ஒன்றை உருவாக்க அனைத்துத் தரப்பினருடனும் சேர்ந்து கூத்தரங்கம் பாடுபடும். அடுத்த ஐந்தாண்டுகளில் இது சாத்திமாகும் என்று கூத்தரங்கம் நம்புகின்றது.

ஆ-ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org